விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 06 புதன்கிழமை (20.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான்ட் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## ஜெனிவா தீர்மானம் அவசியம் அற்றது!

### ஐ.நாவில் இலங்கை காட்டம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை ஆணைக்குழுவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற 19வது அமர்வில் இலங்கை மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தேவையற்ற ஒன்று என இலங்கை தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20வது கூட்டத் தொடரில் ஆரம்பவுரையை ஆற்றிய ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையோ அல்லது வேறு எந்தப் பிரதிநிதிகளுமோ இலங்கை விவகாரம் தொடர்பில் எதுவும் குறிப்பிடாத நிலையில் இவ் அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதித் தூதுவர் மனிசா குணசேகர இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இடம்பெயர்ந்த 290,000 பேரில் 6,022 பேர் மட்டுமே இன்னும் (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் என்பதற்காக எல்லாம் கொடுக்க முடியாது

### அமைச்சர் டக்ளஸ் அதிரடி



இராணுவத்தினர் கேட்கிறார்கள் என்பதற்காக எல்லா நிலங்களையும் கொடுத்துவிட முடியாது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம் தொடர்பாக எழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வட பகுதியில் (20ஆம் பக்கம் பார்க்க)

# வாழ்வுரிமைப் போராட்டத்தை வழிமறித்து பொலிஸ் தடை

## கலவரப் போராட்டமாக சித்தரிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்கள் தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மேற்கொண்ட வாழ்வ்ரிமை போராட்டத்திற்கு பொலிஸார் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்திற்கு சென்ற பஸ்ஸின் கண்ணாடிகள் உடைப்பு; கழிவு ஓயிலும் வீச்சு!





(யாழ்ப்பாணம்)

ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்ட பொதுமக்கள் பயணித்த பேருந்தின் கண்ணாடிகள் அடித்து உடைக்கப்பட்டதோடு பொதுமக்கள் மீது கழிவு ஓயிலும் ஊற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்வுரிமை போராட்டம் நேற்று தெல்லிப்பழையில் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் பங்குகொள்வதற்கு வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் தங்கி வாழ்ந்து வரும் பொதுமக்களும் பங்கு கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டுவிட்டு பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த இந்த மக்களை புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகாமையில் இடைமறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பஷிலுக்கு எதிராக அரசிற்குள் சதி -ஐ.தே.க

பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக அரசாங்கத்திற்குள் சதி இடம்பெறுவதாக ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பலமான எதிர்க் கட்சி இல்லையென அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியமை தொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

உயரத்திலிருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை கூறிய பலர் பள்ளத்தில் வீழ்ந்ததை வரலாற்றில் நாம் கண்டுள்ளோம் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (நு)

## பால்மாவின் விலையை குறைக்கத் தீர்மானம்

இலங்கை சந்தையில் உள்ள குழந்தைகளுக்கான பால்மாவின் விலையை இன்று முதல் குறைக்க நுகர்வோர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ இந்த விடயத்தை குறிப்பிட்டார். சந்தையில் காணப்படும் 19 வகையான குழந்தைகளுக்கான பால்மாக்களை விநியோகிக்கும் வகையில் இந்த கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறித்த விலைகள் 2 ரூபாயிலிருந்து 404 ரூபா வரையில் ஒவ்வொரு உற்பத்தியினதும் விலைகளை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாத் தீர்மானத்தின் பின் மன்மோகனை சந்தித்தார் மகிந்த

(மெக்சிகோ)

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினால் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர் முதல் முறையாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

மெக்சிக்கோவில் அமைந்துள்ள லொஸ் காபோர்ஸ் நகரில் இடம்பெறும் ஜி-20 நாடுகளுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவர்கள் இருவரும் சென்றிருந்தபோதே (20ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க வீதியில் இறங்கவும் தயார்–ரணில்

(கொழும்பு)

துன்பத்தில் சிக்கித் தவிக்கின்ற நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக எமது அரசியல் பயணத்தை சிறந்த முறையில் முன்னெடுத்து மகிந்த அரசை கவிழ்த்து நல்லாட்சி புரியக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை இலங்கையில் நிலை நிறுத்துவோம் என கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலை நிறுத்த, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான பொது எதிரணியின் எதிர்ப்பை அரசுக்கு தெரிவிக்கும் வகையில் அடுத்த மாதம் முதல் வீதியில் இறங்கிப் போராடவும் தாம் தயாராக வுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிக்கும்போது யுத்தத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)




வலிகாமம் வடக்கு மக்கள் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி நேற்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் போராட்டத்தில் ஈடுபடுவதையும் அவர்களது பேரணியை காவல் துறையினர் தடுத்து நிறுத்துவதையும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மாவை எம்.பி. யுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.

# இரண்டாம் தவணை முடிபதற்கு முன்னதாக 3000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

## மீண்டும் உறுதிப்படுத்தினார் அமைச்சர் பந்துல

(கொழும்பு)

பாடசாலையின் இரண்டாம் தவணை முடிபடைவதற்கு முன்பாக ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் பிரத்தியேகமாக மூவாயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லையென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்திற்கென கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகள் மூவாயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

இதன் முதற்கட்டமாகவே எதிர்வரும் 29ஆம் திகதி நேர்முகப் பரீட்சைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஏனைய கணித, விஞ்ஞான மற்றும் ஆங்கில பட்டதாரிகள் 2 ஆயிரம் பேருக்கும் பாடசாலையின் இரண்டாந் தவணை முடிபடைவதற்கு முன்பாக நியமனங்கள் வழங்கி வைக்கப்படுவது உறுதி எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஆயிரம் ஆங்கில பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு தற்போது போதுமான அளவு ஆங்கில பட்டதாரிகள் இல்லாமை பெரும் குறைபாடாக நிலவுவதனால் இந் நியமன திட்டத்திற்குள், ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களையும் இணைத்துக் கொள்வது தொடர்பான யோசனையை அமைச்சரவைக்கு முன்வைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் முடிபடைந்துள்ள நிலையில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆயிரம் பட்டதாரிகளுக்கான பாடசாலைகள் தெரிவே தற்போது நடைபெற்று வருகிறது.

குறித்த மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி பெரும்பாலும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைக்கோ அல்லது அருகில் இருக்கும் ஏனைய மாவட்டப் பாடசாலைக்கோ நியமிக்கப்படலாம்.

நியமனம் பெறும் ஆசிரியர்கள் அவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையில் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களாயினும் கடமையாற்ற வேண்டியது கட்டாயம்.

எக் காரணம் கொண்டும் பாடசாலைகள் மாற்றி வழங்கப்படமாட்டாது. பட்டதாரி குறிப்பிடப்பட்ட பாடசாலையில் கடமையாற்ற விரும்பாத பட்சத்தில் அவரது நியமனம் ரத்து செய்யப்பட்டு இன்னுமொரு பட்டதாரிக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியாக கூறினார்.

இதேவேளை ஆயிரம் கணித, விஞ்ஞான பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது குறித்து அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இரண்டாம் தவணை நிறைவடைவதற்கு முன்னதாக கணித,விஞ்ஞான மற்றும் ஆங்கில பட்டதாரிகள் 2ஆயிரம் பேருக்கும் நியமனங்கள் தாம் கடமையாற்ற வேண்டிய பாடசாலைகளுடனேயே வழங்கப்படும் என்வும் தெரிவித்தார்.

மகிந்த சிந்தனையின் கீழ் மாவட்டம் தோறும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆயிரம் பாடசாலைத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேவையாற்ற எனவே பிரத்தியேகமாக இந்த மூவாயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக் கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் ஏற்கெனவே தமது ஆசிரிய பயிற்சிக்கான டிப்ளோமா கற்கை நெறிகளை கல்வியியற் கல்லூரிகளில் முடித்துக் கொண்டுள்ள மூவாயிரம் மாணவர்களுக்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி அன்று தொழில்நுட்ப பட்டதாரிகளுடன் இணைந்து ஆசிரிய நியமனங்கள் வழங்கி வைக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ந-8-11)

# மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காலிழப்பு

(கரவெட்டி)

நாகர்கோவில் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் தனது காலினை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் வடமராட்சி நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடற்றொழிலுக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த போதே இவர் மிதிவெடியில் அகப்பட்டுள்ளார்.

இதில் பலாலியைச் சேர்ந்த செல்வரட்ணம் செல்வதாஸ் (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே தனது இடது காலினை இழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாவையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிதிவெடி அபாயம் விடுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் தவறுதலாக சென்றபோதே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது. (ந-6-24)

# தமிழினி விரும்பினால் அவருக்கு புனர்வாழ்வு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு பொறுப்பாளர் தமிழினி விரும்பினால் அவருக்கு புனர்வாழ்வு அளிக்க முடியும் என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழினி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலியிடம் சட்டமா அதிபர் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழினியின் விருப்பத்தை அறிந்து கொள்ள குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரி சானக டி சில்வா வெலிக் கடை சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளார்.

தமிழினி யுத்தம் முடிபுற்று கடந்த மூன்று ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(கரவெட்டி)

இனம் தெரியாத நபர்களின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று கரவெட்டி யாக்கரு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புலோலி வடமேற்கு முருகன் கோவிலிடியைச் சேர்ந்த சிவபாதம் ரமணன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

ஆட்டோவில் தான் பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் இரும்புக் கம்பிகளினால் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் தெரிவித்தார். (ந-6,24)

# மனித உரிமைகளை பேணாத கனடா எம்மில் குறைகள் காணக்கூடாது

## இலங்கைப் பிரதிநிதி சீற்றம்

(ஜெனிவா)

கியூபெக்கில் மனித உரிமைமகளைப் பேணாத கனேடிய அரசு, மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஏனைய நாடுகளை குற்றம் சுமத்தக்கூடாது என இலங்கை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 20 ஆவது அமர்வில் ஆரம்ப உரை நிகழ்த்திய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை , மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறாத நாடுகளின் பட்டியலில் கியூபெக் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலும் உள்ளடக்கப் போவதாக தெரிவித்திருந்தார்.

நவநீதம்பிள்ளையின் இந்த அறிவிப்புத் தொடர்பில் கனேடியப் பிரதிநிதி தனதுரையில் அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் பதிலளிக்கும் நேரத்தில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி, தனது மக்களின் உரிமைகளை மீறும் கனடா ஏனைய நாடுகளின் மனித உரிமை விவகாரங்களில் தலையிடக் கூடாது எனக் கூறி யுள்ளார்.

அத்துடன் தனது நாட்டில் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு ஏனைய நாடுகளை நோக்கி கனடா விரல்களை நீட்டக் கூடாது எனவும் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கனடா வலியுறுத்தியிருந்தது.

அத்துடன், இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறாதுவிட்டால், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் கனடா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)




# மரண அறிவித்தல்

## திருமதி ஹென்றிஸ் ஜெயாநந்தினி



சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், துன்னாலை மேற்கு துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹென்றிஸ் -ஜெயாநந்தினி (குட்டிப்பவுன்) நேற்று (19.06.2012) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சிங்கராசா - இருதயநாயகம் தம்பதிகளின் அன்பு மகளும், இராசேந்திரம் - ஸ்ரீபன் தம்பதிகளின் மருமகளும் ஸ்ரீபன் - ஹென்றிஸின் அன்பு மனைவியும், உஷாநந்தினி, இருதயராணி, சசிக்குமார் (ஆசிரியர்), சாந்தகுமார், சிவாநந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநேசன், விஜயகுமார், வசந்தகுமார், ஜெகன் (லண்டன்), ஹொலன்றோஸ் (லண்டன்),ஹெல்மன்ராஜ்(லண்டன்) றீகன்ராஜ், ஹெலன்ராஜ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், சர்மிலா, ஸ்ரீபன்ராஜ், சோபிதா, ஜான்சி, சியாம், அகிம்சா, அனோஸ்கா ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2012) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கை தீவு காரையம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(8674)

# இன்று ஒரு தகவல்

## வியப்பு

ஒரு நண்பர் அவசர அவசரமாக என்னிடம் ஓடி வந்தார்.

அதன்பின் அவர் சொன்னார்;

"என்னால் நம்பவே முடியவில்லை சேர்... என் பையனா இப்படி...?" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்.

"உங்கள் பையன் அப்படி என்னதான் அபூர்வம் செய்து விட்டான்?" என்று கேட்டேன்.

"என்னால் முடியாத ஒரு காரியத்தை அவன் சுலபமாக செய்து முடித்து விட்டான் சேர்!" என்றார்.

"அது என்ன என்றுதான் சொல்லுங்களேன்" என்றேன்.

"ஐந்தாம் வகுப்பிலே அவன் ஒரே தடவையிலே தேறிவிட்டான் சேர்! அதாவது ஒரே தடவையிலேயே சித்தி அடைந்து விட்டான்" என்றார் மூச்சு வாங்காமல்...

கஷ்டப்பட்டுப் பரீட்சை எழுதியவன் அவன். இவருக்கு மூச்சு வாங்குகிறது.

நம்மால் செய்யமுடியாத ஒரு காரியத்தை இன்னொருத்தர் செய்யும்போது அது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது.

சர்க்கஸ் என்று ஒருவர் அந்தரத்தில் தொங்குகிறார்.

அதைப் பார்க்கும்போது பார்வையாளர்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது.

ஏனென்றால், அதுமாதிரி அந்தரத்தில் தொங்குவது என்பது நம்மால் முடியாத காரியம். நம்மால் முடியாத ஒன்றை பிறர் எளிதாகச் செய்யும் போது நாம் மருள்வது இயற்கை.

இன்றைய உலகில் விஞ்ஞானம் புதிய புதிய எதை எதையோ கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கண்டு பிடிப்புக்களைப் பார்க்கிறபோது ஆரம்பத்தில் ஆச்சரியமாக இருக்கிறது. அதன்பின் அது நமக்குப் பழகிப் போய்விடுகிறது.

வானொலிப் பெட்டி புதிதாக வந்தபோது, அதைச் சுற்றி எவ்வளவு கும்பல்!

ஒரு பெட்டி பேசுகிறது என்பது எவ்வளவு வியப்புக்குரிய விடயம்?

இப்போது எவரும் வானொலிப் பெட்டியை வியப்போடு பார்ப்பது இல்லை. மாறாக அதை அலட்சியமாகவும் பார்க்க ஆரம்பித்து விட்டோம்.

எதைப்பற்றியும் போதுமான அளவு புரிந்து கொள்ளாதபோது ஒருவர் ஆச்சரியப்படுகிறார்.

ஒன்றைப் புரிந்து கொண்ட பின்னர்தான் ஆச்சரியம் மறைந்து விடுகிறது. மிக நுட்பமான செயல்களும் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன.

குப்பைக் கூழங்களைக் கூட வாழ்க்கைக்குப் பயன்படுகிற பொருளாக மாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய செயல் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

ஒருவருடைய ஆற்றல் வெளிப்படுத்தப்படும் போது அது வியப்பாக பார்க்கப்படுகிறது.

எல்லா வகையிலும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழிகாட்டுகிற ஒரு மெய்ப்பாடுதான் "வியப்பு" ஆகும்.

இன்றைய இளைஞர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் நம்மை எப்படி எப்படியெல்லாமோ ஆச்சரியப்பட வைக்கிற அதிசய மனிதர்கள் இருக்கிறார்கள்.

ஓர் ஆளைப் பிடித்து ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள்.

சிறை அதிகாரி அவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

இவன் கேட்டான்; "ஏன் சேர் இப்படிப் பார்க்கிறீர்கள்? நான் இங்கே வந்தது ஆச்சரியமாக இருக்கிறதா?"

சிறை அதிகாரி சொன்னார்;

"நீ... இப்போது... இங்கே வந்ததில் எனக்கு ஏதும் ஆச்சரியமில்லை. ஏற்கனவே நீ இங்கேயிருந்து விடுதலையாகி ஆறு மாதம் கூட செல்லவில்லை... இவ்வளவு சீக்கிரமாக திரும்பி வந்திருக்கிறாயே... அதுதான் எனக்கு ஆச்சரியம்!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மு/றோ.க.த.க.பாடசாலைக்கு அடிப்படை வசதிகளில்லை

## மாணவர்கள் அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளுடன் இயங்கி வருவதால் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மீள்குடியேற்றத்தின் பின் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் இப்பாடசாலையில் தரம் 5 தொடக்கம் தரம் 8 வரை 330 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை கணிதம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் இன்மையால் அப் பாடங்களில் மாணவர்கள் பின்னடைவை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இரு ஆங்கில ஆசிரியர் தேவைப்படும் வேளையில் ஒரு ஆங்கில ஆசிரியரே கடமையாற்றி வருகின்றார்.

இப்பாடசாலையில் நூலக வசதி, கணனி அறை வசதி, விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் நவீன தொழில்நுட்பங்களை செய்முறையூடாக மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

வெளிமாவட்டங்களில் இருந்து இப்பாடசாலைக்கு கல்வி கற்பிக்க வரும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதி இன்மையால் தங்கி நின்று கல்வி கற்பிக்க முடியாதுள்ளது.

இப்பாடசாலைக்கு 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் செல்வபுரம், தீர்த்தக்கரை, சிலாவத்தை ஆகிய பகுதிகளில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதி இன்மையால் ஆயிரத்து 400 ரூபா செலவு செய்து முச்சக்கர வண்டியில் வருகின்றனர்.

விளையாட்டு உபகரணங்கள் இன்மையால் விளையாட்டு செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்து வருகின்றன. அத்துடன் காவலாளி இல்லாமையும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் உள்ள பிரதான வீதியில் இப்பாடசாலை அமைந்துள்ளது. எனவே, மஞ்சள் கடவை அமைக்கப்படவில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகரித்து காணப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-267)

# கும்பாபிஷேகம்

(புன்னாலைக்கட்டுவன்)

ஏழாலை தெற்கு- சூராவத்தையம்பதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் முற்பகல் 10.25 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரிகைகள் யாவும் நாளை வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9-78)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70-80 | 110 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 80-100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 90 | 250 |
| தக்காளி | -- | 140 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 60 | 70 |
| கரட் | 100 | 160 | 120 | 170 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 |
| புடோல் | 60 | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 100-120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 95 | 110 | 110 | 90 |
| பாகற்காய் | 100 | 140 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 70 | 100 |
| பயற்றங்காய் | 90-100 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 160 | 150 | 160 |
| பீற்றூட் | -- | 80 | 85 | 90 |
| கறிமிளகாய் | -- | 200 | 170 | 170 |
| முருங்கைக்காய் | 70-90 | 160 | 100 | 120 |
| போஞ்சி | -- | 200 | 130 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 5 | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 130-150 | 110 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 20 | 15-20 |

# இராசி பலன்

*20.06.2012*
*(ஆனி 06, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*பிரதமை முன்னிரவு 10.04 மணிவரை*
*திருவாதிரை பின்னிரவு 2.45 மணிவரை*
*இராகுகாலம் 11.54-1.24 மணிவரை*
*சுபநேரம் 4.24-5.54 மணிவரை*

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் வளர்ச்சி மேலோங்க தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.

**இடபம்** புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் அதிகரிக்கும், ஆனந்தமான நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம், அமைதிக்குறைவான நாள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**சிங்கம்** சிறப்பான நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரும், பயணங்களால் பலனுண்டு, எதிர்பாராத தனவுரவுகள் ஏற்படலாம்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அந்நியர் உதவியுண்டு, வருமானம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், ஆழ்ந்த சிந்தனைகள் தோன்றும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, சில கட்டுப்பாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் சில அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு மறையும்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு இடமுண்டு, கௌரவமான நாள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென் வரலாம், கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புதிய முதலீடுகள் பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்





வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டியின் இறுதி நிகழ்வாக சிந்து நடைக்கூத்து போட்டி அண்மையில் யா/வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் இடம்பெற்றது. இப்போட்டியில் மு/மாங்குளம் மகா வித்தியாலயம் முதலாவது இடத்தையும் வ/பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களுடன் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகள் அமர்ந்திருப்பதை படங்களில் காணலாம். இப்போட்டியில் யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுடனான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முதல்நிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வவுனியா தெற்கு வலயத்தின் 1 ஏபி, 1 சி, தரம் II பாடசாலைகளின் அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. செ.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார். (அ-3-266)

## மஹோற்சவம்

கரவெட்டி செட்டிதறை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# ரியோபிளஸ் டுவென்டி மாநாட்டில் ஜனாதிபதி உரை நிகழ்த்துவார்

## அரச இணையத்தளத்தில் செய்தி

ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்திக்கான ரியோபிளஸ் டுவென்டி மாநாடு பிரேசிலின் ரியோடிஜெனீரோ நகரில் இன்று இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு உரைநிகழ்த்தவுள்ளதாக அரச இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

உலகளாவிய ரீதியாக குறித்த மாநாட்டில் கலந்து கொள்ளும் 130 நாடுகளின் அரச தலைவர்கள் தமது நிலைப்பாடுகளை வெளியிடவுள்ளனர். அதில் இலங்கை ஜனாதிபதியும் உரையாற்றவுள்ளதாக அவ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர ரியோபிளஸ் மாநாட்டில் கலந்து கொள்ளும் சில நாடுகளின் அரச தலைவர்களுடன் மஹிந்த ராஜபக்ஷ பேச்சுக்களையும் நடத்தவுள்ளார். இதற்கு மத்தியில் கியூபாவிற்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இலங்கை ஜனாதிபதி அந்த நாட்டின் உபஜனாதிபதியயையும் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் விளையாட்டுத்துறை, கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் செயற்பாட்டு ரீதியான முன்னெடுப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கியூபா தமது பொருளாதார மேம்பாடுகளில் கண்டுள்ள அபிவிருத்திகளை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இலங்கையின் தெங்கு அபிவிருத்தி குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் மாலை மஹிந்த ராஜபக்ஷ கியூபா-ஹவானா நகரில் இருக்கின்ற புரட்சி தலைவர் ஷேகுவேராவின் மனைவி, பிள்ளைகளையும் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு ஹவானா நகரிலுள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடக செயலாளர் விஜயானந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்போது இரண்டு புத்தகங்களையும் இலங்கை ஜனாதிபதிக்கு கைளித்துள்ளார். (அ-2)

## கும்பாபிஷேகம்

ஈவினைமத்தி திருவருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் யாவும் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகவும் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9-78)

## வீட்டினுள் அனர்த்தம் விளைவித்த இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி வீட்டிற்குள் நுழைந்து அனர்த்தம் விளைவித்தவர்களுக்கு யாழ். நீதிமன்றம் விளக்கமறியல் வழங்கியுள்ளது.

உரும்பிராய் யோகபுரத்தில் உள்ள வீட்டில் கடந்த 15 ஆம் திகதியும் 17 ஆம் திகதியும் உள்நுழைந்த இருவர் அங்கிருந்தவர்களை தாக்கியுள்ளதோடு அமைதியின்மையினையும் ஏற்படுத்தியுள்ளனர்.

குறித்த இருவரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-2-4)

# இலங்கை வங்கி வரலாற்று சாதனை; ஒரு திரில்லியன் ரூபா இலக்கை எட்டியது

## வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க தெரிவிப்பு

வரலாற்றில் முதன்முறையாக இலங்கை வங்கி ஐந்தொகையில் ஒரு திரில்லியன் என்ற பாரிய இலக்கை அடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டு இறுதியில் இந்த இலக்கை அடைவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் கடந்த மே மாதம் 31 ஆம் திகதியே இந்த இலக்கை அடைய முடிந்திருப்பதாக இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையிலுள்ள நிறுவனமொன்று வருமானங்கள், சொத்துக்கள் மற்றும் செலவுகளைக் கொண்ட ஐந்தொகையில் அதிகூடிய பெறுமதியான ஒரு திரில்லியன் ரூபா என்ற மீதியை பெற்ற ஒரே நிறுவனம் என்ற பெருமையையும் இலங்கை வங்கி பெற்றுள்ளது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த இலக்கை அடைந்திருப்பதாக இலங்கை வங்கியின் தலைவர் வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துரைக்கையில்,

யுத்தம் முடிவடைந்த இரண்டரை வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில் இந்த இலக்கை எம்மால் அடைய முடிந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த அதே சமயம் நாட்டை அபிவிருதியை நோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு உதவி செய்து கொண்டுமே நாம் இந்த இலக்கை அடைந்துள்ளோம்.

இலங்கை வங்கியின் முன்னாள் தலைவர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்படுத்திய அடித்தளத்தைக் கொண்டும் எமது முயற்சியின் மூலமும் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது.

2012 ஆம் ஆண்டு ஐந்தொகையில் ஒரு திரில்லியன் ரூபா என்ற மீதியை அடைந்திருக்கும் அதேசமயம் 2012 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட 10 பில்லியன் ரூபா இலாபம் 2010 ஆம் ஆண்டே எட்டப்பட்டு விட்டது. 2011 ஆம் ஆண்டு 15 பில்லியன் ரூபா இலாபத்தை எட்ட முடிந்தது.

வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை அதிகரித்தல் மற்றும் இலங்கை வங்கியை சர்வதேச மயமாக்கல் மூலம் எமது இந்த இலக்கை மேலும் அதிகரித்துச் செல்ல முடியும்.

நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கும் இலங்கை வங்கி பல மில்லியன் ரூபா உதவிகளைச் செய்துள்ளது என்றார்.

இலங்கை வங்கி இந்தியாவில் மேலும் மூன்று கிளைகளைத் திறக்கவிருப்பதுடன் பாகிஸ்தான், அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் கிளைகளைத் திறப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை வங்கியின் செயற்பாடுகள் ஏனைய வங்கிகளையும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

ஒருபோதும் எந்தவொரு வங்கியையும் பாதிக்கும் வகையில் தமது செயற்பாடுகள் அமையாது என இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

யாழ் மண்ணில்....



கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)



இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது.

பதிவுக் கட்டணம்
ரூ. 1000/- மட்டுமே

அலுவலக நேரம் : வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை

குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்.
திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

# அரசின் திட்டமிட்ட நில அபகரிப்பை சர்வதேச சமூகத்திடம் முறையிடுங்கள்

## த.தே.ம.மு, கூட்டமைப்பிடம் பகிரங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் தாயக பூமியில் நன்கு திட்டமிட்டு அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக மேற்கொண்டு வரும் நில அபகரிப்புக்கு எதிராக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சர்வதேச சமூகத்திடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் நேற்று முன்தினம் யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நில அபகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நீதிமன்றினால் இடைநிறுத்தப்பட்டதையடுத்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிராகவும் எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை மதிக்காமல் நீதிமன்றத்தைப் பயன்படுத்தி இந்த உத்தரவை பொலிஸார் பெற்றுள்ளனர்.

எமது போராட்டம் இத்துடன் நிறுத்தப்பட்டு விடாது எமது போராட்டம் தொடர்ந்து இடம்பெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாம் அழைப்பு விடுத்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம் என்பனவும் எமக்கு ஆதரவு கொடுத்தன.

அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக நாமும் தொடர்ந்து குரல் கொடுப்போம்.

அத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் பகிரங்கமாக ஒரு வேண்டுகோளையும் இந்த இடத்தில் தமிழ் மக்கள் சார்பாக விடுக்கின்றேன். அதாவது தமிழர் தாயகம் எங்கும் சிங்கள அரசாங்கம் மேற்கொண்டு வரும் நில அபகரிப்புக்கு எதிராக சர்வதேச நாடுகளிடம் எழுத்து மூலம் முறையிட வேண்டும்.

ஜெனீவாவில் நடைபெற்ற கூட்டத் தொடரில் எவ்வாறு அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவு சேகரிக்கப்பட்டதோ அதேபோன்று இதையும் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# இலங்கையில் அரசியல் செய்ய கூலிப்படைகளின் துணை வேண்டும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது காணப்படுகின்ற சூழ்நிலையில் அரசியல் நடத்துவது என்றால் கூலிப்படைகளின் துணை வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுசிறு அரசியல் அடாவடித்தனங்களை மேற்கொண்டு வந்த கூலிப்படைகள் தற்போது சில அரசியல்வாதிகளின் துணையுடன் சக்திமயப்பட்டுள்ளன.

அண்மையில் கட்டுவன பகுதியில் ஜே.வி. பியின் கூட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் பொலிஸ் தரப்பும் அரசாங்கமும் நடந்து கொண்ட விதம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது அனைத்து பொருட்களும் விலை அதிகரித்துள்ள நிலை யில் அடுத்த தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# நெனச ஒளிபரப்பு சேவையில் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கல்

நெனச கல்வி ஒளிபரப்பு சேவையினரால் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கிளி நொச்சி இந்துக்கல்லூரி, முத்தையன்கட்டு இடதுகரை அ.த. க.பாடசாலை, செம்மலை மகா வித்தியாலயம், மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம், மன்னார் புனித வளநார் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தி யாலயம், மன்னார் அல் மீனா மகா வித்தியாலயம், வவுனியா கல்மடு மகா வித்தியாலயம், சின்னடம்பன் பாரதி வித்தியாலயம், பூவரசம்குளம் மகா வித்தியாலயம், அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயம், சிறி சுமண மகா வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, கோண்டாவில் செங்குந்தா இந்துக் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி, புங்குடுதீவு மகா வித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி, வல்வை மகளிர் மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர்களையும் இரு ஆசிரியர்களையும் மாணவர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்து கொண்டு தொலைக்காட்சி பெட்டிகளை பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-3-266)


## NEWZEALANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzealand நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzealand இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(சி/295)


# மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமை யாற்றும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான மேற்பார்வை மற்றும் பின்னூட்டல் செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

செயலமர்விற்கு வருகை தரும் ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையில் மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் குறைகளை இனங்கண்டு அவற்றை அறிக்கைப் படுத்தி எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-3-15)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று இரண்டாம் திருவிழா**

**நாளும் சென்றிடுவோம்**

மணிபல்லவம் என்னும் ஊராம் –அங்கு
மனிதர் துயர் தீர்க்கின்ற தாயாம்
கடலும் அவளை வணங்கிடுமாம் – அந்த
அன்னைக்கு இன்று திருவிழாவாம்
ஊரே செல்லுது அங்கு கூடி – உலகமே
போற்றுது அவளைப் பாடி!
நாமும் அவள் அருள் வேண்டி
நாளும் சென்றிடுவோம் நாடி!

யாழ்ப்பாணம் ரி.கேமராஜ்

**ஞானக்கண் வேண்டுமம்மா**

அலை கடலும் அமைதிகாக்க
அடியவரின் அலைநடுவே
அரவமது குடை பிடித்துவர
அன்னையவள் கொடியேற்றும்
அருட் காட்சி காண ஞானக்கண் –
வேண்டுமம்மா

ஆனைக்கோட்டை இ. தனா


பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை

## காவேரி சில்க்ஸ்



இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்.

48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2333

திருமணப்பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்


# மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையினரும் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தினரும் இணைந்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் கற்கும் மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி இன்று காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் வரை சாவகச்சேரி நகராட்சி மன்றக் கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளனர்.

நகர பிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வளவாளர்களாக யாழ். மாவட்ட முன்னாள் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் கே.பத்மநாதன், மருதங்கேணி முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரப்பிள்ளை, விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் வடமாகாண உதவிப்பணிப்பாளர் ரி. டபிள்யூ. விமலராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் சி.புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(அ-3-29)


## விசேட கருத்தரங்குகள்

**இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு**
வியாழன் (21/6), சனி (23/6)
காலை 10.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை

**இலங்கை நிர்வாகசேவை(SLAS)**
வெள்ளி (22/6), சனி (23/6), ஞாயிறு(24/6)
காலை 10. 00மணி தொடக்கம் 5.00மணி வரை

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரிவீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்
தொடர்பு:-0754164564

(3672)

# மிதிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசத்திற்குள் மிதிவெடி அபாய பலகைகள் பொருத்தப்பட்டது ஏன்?

## மாதகல் மேற்கு மக்கள் கேள்வி; அமைச்சரிடமும் அரச அதிபரிடமும் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**மதிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் தமது சொந்த காணிகளுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் திடீரென மிதிவெடி அபாய பலகைகள் நாட்டப்பட்டது எதற்காக என மாதகல் மேற்கு மக்கள் முற்றுகைப் போராட்டத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.**

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஒன்று கூடிய மாதகல் மேற்கு பிரதேச மக்கள் முற்றுகைப்போராட்டத்தில் ஈடுபட்டதோடு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரிடம் மகஜரையும் கையளித்தனர்.

இந்த மகஜர் மாதகல் மேற்கு மீள்குடியேற்ற திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

இந்த முற்றுகைப்போராட்டத்தில் ஈடுபட்ட மாதகல் மேற்கு பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது கைகளில் எதிர்ப்பு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

அதில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு கடந்த 2 ஆம் திகதி மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு சென்று வருவதற்கு அனுமதி வழங்கப்பட்ட காணிகளுக்குள் மீண்டும் மதிவெடிகள் எவ்வாறு வந்தது. பயங்கரவாதத்தால் அகதிகள் பட்டம் பெற்ற நாங்கள் சுதந்திர பூமியில் இன்னும் அகதிகளாகவே வாழ்கின்றோம் போன்ற பதாதைகளைத் தாங்கிநின்றனர்.





மக்கள் முற்றுகைப்போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களை சந்தித்து கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ், மக்களின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் 22 வருடங்களுக்கு மேலாக பொறுமை காத்த நீங்கள் இன்னும் சிறிது காலம் பொறுமையாகவிருங்கள் எனக் கேட்டுக்கொண்டதோடு மகஜரையும் பெற்றுக்கொண்டார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மாதகல் மேற்கு(ஜே/152)உயர் பாதுகாப்பு வலயத்தினுள் குடிநிலங்களைக் கொண்ட மக்களாகிய நாம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வரும் விடயங்களாவன,

கடந்த 1992 ஆம் ஆண்டு எமது கிராமத்தை விட்டு வெளியேறி தற்போது யுத்தம் முடிவுற்ற சூழலிலும் சொந்த ஊரிலேயே அகதி வாழ்க்கை வாழும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

இதேவேளை கடந்த 2 ஆம் திகதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் எமது காணிகளைத் துப்புரவு செய்யலாம் என்ற அனுமதி கிடைத்தது.

ஆனால் துப்புரவு செய்வதற்காகச் சென்ற மக்களை கடற்படையினர் விரட்டிக் கலைத்துள்ளனர். அத்துடன் துப்புரவு செய்வதற்காகக்கொண்டு சென்ற கத்தி, கோடரி போன்றவற்றை பறித்துவிட்டனர்.

மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ள எமது பகுதிக்குள் மீண்டும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு மக்கள் அச்சுறுத்தப்படுவதை உடன் நிறுத்தி எச்சரிக்கைப் பலகைகள் உடன் அகற்றப்பட வேண்டும்.

மாணவர்களின் கல்விக் கூடமான நுணசை வித்தியாலயத்தினுள் இருக்கும் கடற்படையினரின் முகாமை உடனே அகற்றி கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வழியமைத்துத் தர வேண்டும்.

மேற்படி விடயங்களைக் கவனத்தில் எடுத்து எமது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வினைப் பெற்றுத்தருமாறு கேட்டுக் நிற்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)




## விசமிகள் நச்சுமருந்து தெளிப்பு; பூங்கன்றுகள் கருகி நாசமாகின

(யாழ்ப்பாணம்)

வீட்டு அலங்கார பூங்கன்றுகள் விற்பனை செய்யும் விற்பனை நிலையமொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்த பெறுமதி வாய்ந்த பூங்கன்றுகளுக்கு இனந்தெரியாத விசமிகள் சிலர் நச்சு மருந்து தெளித்ததனால் அனைத்துப் பூங்கன்றுகளும் கருகியுள்ளன.

இச்சம்பவம் கடந்த வாரம் கே.கே. எஸ். வீதி தட்டாதெருச் சந்தியிலுள்ள நியூ அன்னலஷ்மி அங்காடியில் இடம்பெற்றுள்ளது.

இதனால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த அனைத்துவகைப் பூங்கன்றுகளும் கருகி நாசமாகியுள்ளன.

குறித்த பூங்கன்று விற்பனை நிலையத்தின் உரிமையாளர் வழமைபோல கடந்த 8 ஆம் திகதி தனது கடையினைப் பூட்டிவிட்டு வீடு சென்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்திலேயே நச்சு மருந்து தெளிக்கப்பட்டு உள்ளதாகவும் நச்சு மருந்து தெளிக்கப்பட்டு உள்ளமை சில விவசாய மருந்து வர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உரிமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

## எழுதுமட்டுவாழ் தெற்கு கிராமத்தில் மயானம் இல்லாமையால் மக்கள் அவதி

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியேற்றம் இடம்பெற்று எட்டுமாதங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதியில் உள்ள இராமியன் மயானம் பொது மக்களின் பாவனைக்காக திறந்துவிடப்படவில்லை.

கண்ணிவெடிகள் அகற்றப்படாத காரணத்தால் திறக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் அதனை அகற்றி பொது மக்களின் பாவனைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் அங்கு இடம்பெறவில்லை எனவும் மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

அப்பகுதி மக்கள் உறவினர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள எழுதுமட்டுவாழ் வடக்கு மயானத்திற்கே எடுத்துச் செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு கண்ணிவெடிகளை அகற்றி மயானத்தை மக்கள் பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் துரையன்வளவு பிள்ளையார் ஆலய அஷ்டோத்திர சத (108) சங்காபிஷேகமும் மணவாளக்கோலத்திருவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)





வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிதி ஆணைக்குழுவின் பெறுபேறு அடிப்படையிலான திட்ட மதிப்பீடு சம்பந்தமான செயலமர்வு நேற்றும் நேற்று முன்தினமும் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி உட்பட நிதி ஆணைக்குழுவினர் மற்றும் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# வைகாசி மாத இராசி பலன்

# 14.05.2012 - 14.06.2012



## கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**காக வாகனத்தானை வழிபட்டால் கவலைகள் தீரும்!**
**எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமைய வேண்டும் என்று விடும்பும் கும்ப இராசி நேயர்களே!**

## கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய நேரமிது பரிகாரங்கள், வழிபாடுகள் மேற்கொள்வது நல்லது

நீங்கள் இரக்க சுபாவமும், எல்லோரிடமும் எளிதில் பழகும் ஆற்றலும் கொண்டிருப்பீர்கள். கொடுத்த வாக்கை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று துடிப்பீர்க்ள். தன்னம்பிக்கையும், விடா முயற்சியும்தான் வாழ்வில் முன்னேற்றம் தரும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். கற்பனை உள்ளமும், கலை ஆர்வமும் மிக்கவர்களாக விளங்குவீர்கள். பேச்சாற்றல் வெகு எளிதில் பிறரை கவரும் தன்மையுடையது.

உங்களுக்கு இந்த ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத்தொடக்கத்திலேயே இராசிநாதன் சனி வக்ரம் பெறுகிறார். அதுமட்டுமல்ல, செவ்வாயும் அதோடு இணைந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, நடைமுறை வாழ்க்கையில் குறுக்கீடு சக்திகள் ஏராளமாக வந்து சேரலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. உள்ளத்தில் சோர்வும், உடலில் அசதியும் குடுகொள்ளும்.

சிந்தித்து நல்ல முடிவை எடுத்தாலும், அதை செயற்படுத்த இயலுமா என்பது சந்தேகம்தான். சந்தித்த நண்பர்கள் உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்து பேசுவர். சனி, செவ்வாய் ஆதிக்கம் வலுவடையும் இந்த மாதத்தில் எதிலும் பொறுமையோடும், நிதானத்தோடும் செயற்படுவதுதான் நல்லது. எதிர்ப்புகள் மாறவும், இல்லத்தில் அமைதி கிடைக்கவும், அங்காரகனுக்கும், சனிக்கும் பரிகாரம் செய்வதோடு, சிறப்பு தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**கடக புதனின் சஞ்சாரமும், கன்னிச் சனியின் வக்ர நிவர்த்தியும்**

ஜூன் 21 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 5-க்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் போது பிள்ளைகளால் செலவினங்கள் உண்டு. அதன்படி, கல்வி முயற்சி கருதியோ, கடல் தாண்டும் முயற்சி கருதியோ ஒரு தொகையைச் செலவிட நேரிடும். எட்டுக்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால், கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகளும் வந்து சேரும். அதே தினத்தில் சனியும் வக்ர நிவர்த்தியாகிறார். எனவே, அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வலுக்கிறது. ஆகவே, திடீர் இடமமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் என்று ஏதாவது ஒரு மாற்றம் வந்து சேரலாம். நாடு மாற்றம் வந்தால் மட்டும் யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**கன்னி இராசியில் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அது சனி பகவானோடு சேர்ந்து இணைந்து செயற்படுவதால், கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. உடல் ஆரோக்கியத்தில் திடீர் தாக்குதல்கள் ஏற்பட்டு அகலும். உள்ளத்தில் உற்சாகமும், தெம்பும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் பொழுது, விழிப்புணர்ச்சி தேவை. பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு, புதிய வாகனங் களை வாங்குவதில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**மிதுன புதனின் வக்ர இயக்கம்!**

ஜூலை 11 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். பூர்வீக சொத்துக்களில் தகறாறுகள் ஏற்பட்டு, நடந்த பஞ்சாயத்துக்கள் முடிவுக்கு வருவதுபோல் தோன்றி நீண்டு கொண்டே செல்லும். அரசு வழி சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

இம்மாதம் நவக்கிரக வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். தடைகள் அகலும். தக்க பலனும் கிடைக்கும்.

இம்மாதம் எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய மாதமாகும். மாதத் தொடக்கத்தில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெற்றாலும், சனி வக்ர நிவர்த்திக்குப் பின்னால் சஞ்சலங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் தன்னிச்சையாக முடிவெடுத்து விடாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பெற்றோர் நெருக்கம் குறையலாம். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். விரதம், வழிபாடுகளால் வாழ்க்கை வளமாகும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**கூடுதல் விழிப்புணர்ச்சி தேவைப்படும் நேரம்!**
**பொன்னான நேரத்தை பொது வாழ்விற்கு என்று செலவிட்டு புகழ் குவிக்கும் மீன இராசி நேயர்களே!**

## வருமானம் திருப்திகரமாக அமையும் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வரும்

மற்றவர்கள் செய்ய முடியாத செயல்களை நீங்கள் செய்து காட்டுவீர்கள். அதனால் பெரிய மனிதர்களின் தொடர்பு உங்களுக்கு அதிகம் உண்டு. நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். ஆடம்பரத்தை அதிகம் விரும்பாவிட்டாலும், அப்போதைக்கு அப்போது உங்களை அழகுபடுத்திக் கொள்வதற்குத் தயங்க மாட்டீர்கள். பேரும், புகழும்தான் முக்கியம் என்று கருதுவீர்கள். பெரியவர்கள் சொல்லை மதிப்பவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் சனி ஏழாம் இடத்தில் வக்ரம் பெறுகிறார். 2,9 க்கு அதிபதியான செவ்வாய் 6 ஆம் இடத்தில் இருக்கிறார். ரோக ஸ்தானத்தில் குடும்பஸ்தானாதிபதி இருப்பதால், குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு வைத்திய செலவுகள் வந்து கொண்டே இருக்கும். திடீர் திடீரென எண்ணங்களை மாற்றிக் கொள்வீர்கள்.

திட்டமிட்ட பயணங்களை திடீரென மாற்றியமைப்பீர்கள். தொழிலதிபர்களுக்கு பணியாளர் பிரச்சினை அதிகரிக்கும். பழைய பணியாளர்கள் விலகுவதும் புதிய பணியாளர்கள் சேருவதும் வாடிக்கையாகவும், வேடிக்கையாகவும் இருக்கும். எதையும் யோசித்து செய்வதோடு, இயன்றவரை அனுபவஸ்தர்களை கேட்டுச் செய்வது நல்லது.

சனிக்குரிய வழிபாடுகளை செய்வதோடு, சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**கடக புதனின் சஞ்சாரமும், கன்னிச் சனியின் வக்ர நிவர்த்தியும்**

ஜூன் 21 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும், செலவு நடைகள் அதிகரிக்கும். சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் அதன்பார்வை பலம் அதிகரிக்கிறது. எனவே, ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. அடுத்தவர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பயணங்களை மாற்றி அமைப்பீர்கள்.

**கன்னிச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்க போகிறார். சனியும், செவ்வாயும் ஒன்று கூடுவது அவ்வளவு நல்லதல்ல. இனம்புரியாத கவலை மேலோங்கும். எதைத் தொட்டாலும் தாமதம் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். வைத்திய செலவு அதிகரிக்கும். இந்த நேரத்தில் அதிக பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அப்பொழுது தான் வீண் வம்புகளில் இருந்து விடுபட இயலும்.

**மிதுன புதனின் வக்ர இயக்கம்!**

ஜூலை 11 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இது ஓரளவு நன்மையையே வழங்கும். சுகஸ்தானாதிபதி வக்ரம் பெற்றாலும், வாகனம் மாற்றங்கள் உருவாகலாம். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். உறவினர் பகை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது.

இம்மாதம் விநாயகர் வழிபாடும், அனுமன் வழிபாடும் வெற்றிக்கு வித்திடும்.

இம்மாதம் எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய மாதமாகும். வீட்டு பராமரிப்புச் செலவு கூடும். உடனிருப்பவர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ஜீரணத் தொல்லைகளும், சிறு சிறு தொல்லைகளும் வந்து கொண்டேயிருக்கும். கணவன்- மனைவிக்குள் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்துக் கொள்வதன் மூலமும், அன்பு காட்டுவதன் மூலமும் ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள இயலும். சனீஸ்வர வழிபாடும் அங்காரக வழிபாடும் சஞ்சலம் தீர்க்கும்.

(முற்றும்)

# டெங்கு ஒழிப்பு சுற்றறிக்கையை செயற்படுத்துவதில் அசமந்த போக்கு

## சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

டெங்கு ஒழிப்புக்கென விசேட குழுக்களை அமைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் விசேட சுற்றறிக்கையை விடுத்துள்ள போதிலும் அச்சுற்றறிக்கையை செயலுருப்படுத்துவதற்கு பல அமைச்சுகளும் அரச நிறுவனங்களும் உரிய நடவடிக்கை எடுக்காதிருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாரஹேன்பிட்டியிலுள்ள தேசிய இரத்த வங்கி கேட்போர் கூடத்தில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அரச நிறுவனங்களே போதிய ஒத்துழைப்பு நல்காவிட்டால் அந்த நடவடிக்கைகளை எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

இந்நாட்டில் டெங்கு நுளம்பு பெருக்கம் தீவிரமடைந்ததை கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 25 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் மீண்டும் தீவிரமடையக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையும் 15 ஆயிரத்து 243 பேர் டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளாகினர். இவர்களில் 77 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 11 ஆயிரத்து 423 பேர் நோய்க்கு உள்ளாகினர். இவர்களில் 82 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை விரிவான அடிப்படையில் முன்னெடுப்பதற்காக விசேட குழுக்களை அமைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் விசேட சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்த சுற்றறிக்கை அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள், ஆணைக்குழுக்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

டெங்கு ஒழிப்புக்காக அரசாங்கம் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங்களுக்கு சகலரும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். அதுவே டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும் என்றார்.

(அ-2)

# பணவீக்கம் தொடர்பில் இலங்கை எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

## சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு நாணய மாற்றுவீதம் அதிகரித்துள்ள நிலையில் பணவீக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

வெளிநாடுகளில் திரட்டப்பட்ட மில்லியன் கணக்கான வர்த்தக வங்கிகளின் கடன்களை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இது உள்நாட்டின் நாணய புழக்கத்தை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் புதிதாக நாணயங்கள் அச்சிடப்படுவதும் இலங்கையில் பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைகின்றமைக்கு காரணம் என சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரி ஜோன் நெல்மெஸ் இது தொடர்பில் இலங்கை அவதானமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வெளிநாடுகளின் முதலீடுகள் ஈடுபடுத்தப்படுகின்றமை வரவேற்கத்தக்க விடயம் எனினும் அவ்வாறான பாரிய நிதிகளினால் ஏற்படுகின்ற சிக்கல்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-2)

# மெய்யறிவு சிந்தனை கலந்துரையாடல்

மெய்யறிவு சிந்தனை எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் ஒன்று அரசியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர் ஏ.எஸ்.உதயகுமார் தலைமையில் இல. 84 ஜிம்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தன்னிலை மாறாது மெய்யியலின் பிரயோகம் எவ்வாறு ஊடகத்தில் பேணப்படுகிறது, எதையும் ஏற்றுக்கொள்ளாது செய்திகளை சரி பார்த்து அறிக்கை எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பாகவும் வரலாறு மற்றும் ஏனைய துறைகள் தொடர்பாக எவ்வாறு மெய்யறிவு எட்டப்பட முடியும் என்பன தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஊடகத்துறை சார்ந்தோர், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் கலந்து கொள்ள முடியுமென இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-9)

# மஹோற்சவம்

(சிவநகர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீசு வரர் ஆலய மஹோற்சவம் கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

(அ-9-254)

# வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு இலங்கை இடமளிக்காது

## இலங்கை உயர்ஸ்தானிகர் காரியவசம் தெரிவிப்பு



(டில்லி)

எந்தவொரு நாடும் வேறு நாட்டின் மீது தாக்குதலை மேற்கொள்ள இலங்கையை ஆதாரத் தளமாக பயன்படுத்த நாம் ஒரு போதும் அனுமதியோம். வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிக்கான களமாகாமல் இருப்பதை உறுதி செய்வதில் இலங்கை தீர்க்கமாக உள்ளது என இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தொன்று தொட்டு உலக வல்லரசுகளின் பார்வையில் இந்து சமுத்திரம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றது. கிழக்கு, மேற்கு கடல் வாணிபத்தில் இந்து சமுத்திரத்தின் பொருளாதார முக்கியத்துவமே இதற்கு காரணமாகும்.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இலங்கை வல்லரசுகளின் தந்திரோபாய மற்றும் ஊக்க செயற்பாடுகளிலிருந்து விலகியிருக்க முடியவில்லை. இவ்வாறான பிரச்சினை பற்றி நிபுணர் குழுக்கள், அறிஞர்கள் மற்றும் ஊடகங்கள் தொடர்ந்தும் கருத்துரைத்தவாறு இருக்கின்றன.

இலங்கையில் சுகாதாரத்தை பாதுகாப்பதற்கு இலங்கை அரசு எப்போதும் மிகுந்த அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் இருந்து வருகிறது. இந்த பிராந்தியத்தின் பாதுகாப்பு, அமைதியை பாதுகாப்பதில் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது.

30 வருடங்களாக பயங்கரவாதம் காரணமாக துன்பப்பட்ட நாம் யுத்தத்தின் போது நாடுகளும் மக்களும் படும் அவலத்தை கண்டுள்ளோம். எமது கொள்கைகள், நடைமுறைகள் காரணமாகவே நாம் சகல நாடுகளுடனும் விசேடமாக இப்பிராந்தியத்திலுள்ள இந்தியா, சீனா, பாகிஸ்தான், இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் நட்புறவோடு உள்ளோம்.

இலங்கை சர்வதேச நாடுகள் சமுதாயம் தொடர்பில் தனது பங்களிப்பை மிகச் சிறப்பாக வழங்கி வருகிறது. நாம் பல சர்வதேச ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளோம். நாம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமநீதி என்பவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள்.

இதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஏனைய நாடுகளுடன் ஒத்துழைக்கின்றோம். இதை நாம் ஏனைய நாடுகளிலிருந்தும் சர்வதேச அரங்கின் முக்கியஸ்தர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

(அ-2)





க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சித்திரபாட முகாம் அண்மையில் யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் வளவாளரான என்.நிமலரஞ்சன் சித்திரபாட முகாமை நடத்துவதையும் ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 103



போலந்தில் கிறிஸ்தவர்களால் மறைத்து வைத்து காப்பாற்றப்பட்ட யூதச்சிறுவன் -பின்னர் தனது நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டவன்

### செக்கோஸ்லொவாக்கிய பூமியில்

மேற்கு கர்பாத்து நடவடிக்கை 1945 ஆம் ஆண்டு ஜனவரி 12 முதல் பெப்ரவரி 18 வரை 2-வது உக்ரேனிய சேனையுடன் சேர்ந்து, 1-வது உக்ரேனிய சேனையின் உதவியோடு 4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது.

மலைகள், காடுகளடர்ந்த கர்பாத்துப் பிரதேசம், வெண்பனி, மழை, மேகமூட்டம் மற்றும் பொறியியல் ரீதியாக் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எதிரியின் தற்காப்பு ஆகியவை சோவியத் துருப்புகளின் தாக்குதல் நடவடிக்கைக்கு இடர்பாடுகளை ஏற்படுத்தின. ஆனால், சோவியத் துருப்புகள் இந்த இடர்பாடுகளைப் பொருட்படுத்தாது, எதிரியின் தற்காப்பைப் பிளந்து கொண்டு முன்னேறின. 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ் வெற்றிகரமாக இயங்கியது. ஜனவரி 28 ஆம் திகதி பொப்ராத் நகரை விடுவித்த இது வாக் ஆற்றுப்படுகையின் வழியாக ருஷெம் பெரோக்கை நோக்கி முன்னேறியது. பாசிஸ்டுகள் இந்த இடத்தில் பலத்த ஆதார நிலையங்களோடு கூடிய பல படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பை ஏற்படுத்தி வாக் ஆற்றுப் படுகையை உறுதியாக மூடினர். ஆனால், தமது சொந்தப் பூமியை விடுவித்த செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களின் தாக்குதல் வேகத்தை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. பெப்ரவரி மத்தியில் கோர்பஸ்லிப்தோவ்ஸ்கியையும் செயின்ட்மிக்குலாசையும் நெருங்கியது. கொரில்லாப்படை வீரர்கள் இதில் கோர்பஸிற்குப் பெரும் உதவிபுரிந்தது.

4-வது, 2-வது உக்ரேனிய சேனையின் ஜனவரி- பெப்ரவரி தாக்குதல்களின் பயனாய் 15 இலட்சம் மக்கள் வாழும் கோஷித்சே, பிரெஷோவ், பான்ஸ்க- பீஸ்த்ரிட்ஸா ஆகிய செக்கோஸ்லொவாக்கிய மாகாணங்கள் கிட்டத்தட்ட முழுமையாக விடுவிக்கப்பட்டன. சென்டர் மற்றும் தெற்கு படைத் தொகுதிகளைச் சேர்ந்த ஐந்து பாசிசப் படைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. 1 இலட்சத்து 37 ஆயிரத்துக்கும் அதிகமான எதிரி போர் வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் சோவியத் துருப்புகள் சிறைப்பிடித்தன. இது தவிர 230 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள், 320 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகள், 65 விமானங்கள், ஏராளமான மற்றவகை போர்த் தளவாடங்கள் இராணுவ சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. மொராவ்ஸ்க- அஸ்த்ராவா தொழிற்துறைப் பிரதேசத்தை விடுவிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

மொராவ்ஸ்க-அஸ்த்ராவா நடவடிக்கை, (1945 மார்ச் 10- மே 5) ஹைன்ரித்சி என்ற பாசிச ஜேர்மனியப் படைத் தொகுதியை முறியடித்து மொராவ்ஸ்க- அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்தை விடுவிக்கும் நோக்கத்தோடு 4-வது உக்ரேனிய சேனையின் பிரதே

ப்ராக் விடுதலையின்பின் நேச அணிகள்



## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

சத்தை விடுவிக்கும் நோக்கத்தோடு 4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது. சோவியத் துருப்புகளோடு சேர்ந்து ஜெனரல் ஸ்வோபடாவின் தலைமையில் 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸும் இயங்கியது.

ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் எதிரியைச் சிறிதளவே விஞ்சியிருந்த ஒரு நிலையில், அதாவது காலாட்படையில் 1.7 மடங்கும் பீரங்கிகளில் 2 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 1.8 மடங்கும் விமானப்படையில் 3.4 மடங்கும் விஞ்சியிருந்த நிலையில் கடினமான மலைகளும் காடுகளும் அடர்ந்த சூழ்நிலையில் சேனை தாக்குதலைத் தொடுக்க வேண்டியிருந்தது, பலமான, முன்கூட்டியே தயார்ப்படுத்தப்பட்ட எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

மார்ச் 10 ஆம் திகதி சேனையின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. கடுமையான, இரத்தக்களரியான சண்டைகள் மூண்டன. எதிரியின் கடும் எதிர்ப்பை உடைத்துக் கொண்டு சேனை உறுதியாக முன்னேறி மார்ச் மாதம், எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

சோவியத் துருப்புகள் சென்ற இடங்களில் எல்லாம் ஸ்தலமக்களுக்கு தன்னலங்கருதா உதவி புரிந்தன. ஆதரவளித்தன. பாசிச ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு சில ஆண்டுகளாக சுரண்டி, கொள்ளையடித்து வந்த பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டதும், அங்கெல்லாம் யுத்தத்தின் விளைவுகளை அகற்றவும் சமூக வாழ்வை நிலைநாட்டவும் சோவியத் போர்வீரர்கள் நகர, கிராம மக்களுக்கு உதவினர். சோவியத் இராணுவப் பிரிவுகள் இம்மக்களுக்குப் கோதுமை மாவு, சர்க்கரை, எரிபொருள் முதலியவற்றை அளித்தன. வீடுகள், சாதாரண மற்றும் இருப்புப் பாதைப் பாலங்களில் இருந்த கண்ணி வெடிகளை அகற்றின, சாலைகள், இருப்புப் பாதைகளைப் பழுது பார்த்தன. இது செக்கோஸ்லொவாக்கிய மக்களின்பாலான சோவியத் நாட்டின் சோதர உணர்வுகளின் தெளிவான வெளிப்பாடாக இருந்தது.

ஏப்ரல் ஆரம்பத்தில் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் வாழ்வில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நடந்தது. நாட்டின் ஜனநாயக சக்திகள் தேசிய முன்னணியின் முதல் அரசாங்கத்தை ஏற்படுத்தின. இதில் முக்கிய மந்திரிப் பதவிகளைக் கம்யூனிஸ்டுகள் வகித்தனர். ஏப்ரல் 5 ஆம் திகதி கோஷித்சே நகரத்தில் நடைபெற்ற புதிய அரசாங்கத்தின் கூட்டத்தில் தேசிய முன்னணியின் வேலைத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இது செக்கோஸ்லொவாக்கிய மக்களுக்கு சோஷலிசத்தின் வெற்றியை நோக்கிய பாதையைத் திறந்துவிட்டது.

இந்த வேலைத் திட்டத்தில், செக்கோஸ்லொவாக்கியாவை பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப் பாளர்களிடமிருந்து விடுவிப்பதில் செஞ்சேனை புரிந்த சேவைகளும் செக்கோஸ்லொவாக்கிய மக்களின் எதிர்காலத்திற்கு வகை செய்வதில் இதன் தீர்மானகரமான பங்கும் உயர்வாக மதிப்பிடப்பட்டன. சோவியத் போர்வீரர் களின் வீரத்திற்கும் ஆண்மைக்கும் உரிய மரியாதை அளிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு கோஷித்சே வேலைத் திட்டம் ஏற்கப்பட்டதை அடுத்து செக்கோஸ்லொவாக்கிய் கம்யூனிஸ்டுக் கட்சி மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. "நம்மை விடுவிக்க வந்த செஞ்சேனைக்கு சகல விதங்களிலும் உதவி செய்யுங்கள், புதிய செக்கோஸ் லொவாக்கிய இராணுவத்தில் சேருங்கள். இருப்புப் பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், தந்தி போன்றவற்றை, அதாவது போர்முனைக்குத் தேவையான எல்லாவற்றையும் புனர்நாட்டுங்கள்..." என்று அந்த அறைகூவலில் கூறப்பட்டிருந்தது.



ஆஸ்திரியாவில் குண்டுகளிலிருந்தும் பட்டினிச்சாவிலிருந்தும் தப்பிப்பிழைத்த அநாதரவான சிறார்கள்-பின்னர் நேச அணியினரால் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள்

(தொடரும்)

# 12,000 ஆண்டுகளுக்கு முந்திய எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

இலங்கையில் முதல்முறையாக வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மனிதனின் எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேனாரத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை, பகியங்கல பகீன் வளைவு தொல்பொருள் பிரதேசத்திலேயே இந்த மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய மனிதனின் எலும்புக்கூடு முழுமையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும். முன்னதாக அம்பலாந் தோட்ட, ஹுங்கமவில் வரலாற்று காலத்துக்கு முந்திய மனிதனின் எலும்புத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டபோதும் அது முழுமையானதாக இருக்கவில்லை.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடு 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாக இருக்கக்கூடும் என்று கலாநிதி சேனாரத் தசநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# காடுகளுக்கு வேண்டுமென்றே சிலரால் தீ மூட்டப்படுகிறது

## முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிப்பு

நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் காட்டுத்தீயானது அப்பகுதியிலுள்ள சிலரால் வேண்டுமென்றே மேற் கொள்ளப்பட்டு வரும் நாசகார செயல் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் காட்டுத்தீ ஓர் இயல்பான நிகழ்வு அல்ல. காட்டுத்தீ காரணமாக 800 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகளும் பயிர்ச் செய்கை நிலங்களும் அழிந்துள்ளதாகவும் அது அறிவித்துள்ளது. நடுக்காட்டில் மக்கள் வாழாத பகுதியில் தீ உண்டாகியமை இந்த காட்டுத்தீ சம்பவங்கள் தற்செயலாக இருக்க முடியாது என்பதை வெளிப்படுத்துவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் சரத் லால் குமார கூறியுள்ளார்.

இந்த காட்டுத்தீக்கு காரணமான விஷமிகளைக் கண்டுபிடிப்பது இயலாத காரியமாகும். இவ்வாறு காட்டுத் தீ பரவுவது ஆபத்தான விடயம். இதனால் பல ஏக்கர் நிலங்கள் அழிந்துள்ளதாகவும் மக்களுக்கு விளக்கி அவர்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என சரத் லால் குமார மேலும் கூறியுள்ளார். (அ-2)

# பாதாள உலகக்குழுக்களை கைது செய்த பொலிஸ் அதிகாரிகள் வெளியேற்றம்

## குற்றவாளிகள் விடுவிக்கப்படும் சாத்தியம்

பாதாள உலகக் குழுக்களை கைது செய்த பொலிஸ் உயரதிகாரிகள் வெளிநரடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் குழுத்தலைவர்கள் போன்றோரை கைது செய்ய உயர் பொலிஸ் அதிகாரிகள் இரகசியமான முறையில் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பாக போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்த பொலிஸ் உயரதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதனால் சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகளை தொடர்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் தப்பிச் சென்றுள்ளதனால் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறிய பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். சில பொலிஸ் அதிகாரிகள் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீதவான் ஒருவர் மற்றும் பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்குச் செந்தமான வாகனங்களில் போதைப்பொருள் கடத்தப்பட்டிருந்ததாகச் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நீதவானும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் தற்போது நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. (அ-2)

### புதிய கட்டடத்தொகுதியில் இறைச்சிக்கடை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் இறைச்சிக்கடைகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் புதிய கட்டடத்தொகுதியில் இயங்கவுள்ளது.

மேற்படி கட்டடத்தொகுதி சாவகச்சேரி நகரசபையினால் தனங்கிளப்பு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருட இறுதிக்குள் பொதுச்சந்தையுடன் காணப்படும் மீன் சந்தைக்கட்டடத்தையும் தனங்கிளப்பு வீதியில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகர பிதா இ. தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (அ-3-29)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஏலம்

**Botanical Name- Elettaria repens**
**Family-Zingiberaceae**
**Engl- Malabar cardamom**
**Sinh-Ensal**

பல்லாண்டு காலம் வாழும் செடி வகையாகும். மென்மையான கிளை விட்ட வேரைக்கொண்டது. தண்டு. 2-3 மீற்றா உயரம் வளரக்கூடியது. தண்டின் அடிப்பகுதி மென்மையான படலங்களால் சூழப்பட்டிருக்கும். இலைகள் தனியிலை 30-90 சென்ரிமீற்றர் நீளமும் 7.5 -15 சென்ரிமீற்றர் அகலமுமுடையது.

பூக்கள் இருபாலானவை. ஒழுங்கானவை. பழங்கள் கோளவடிவின. 1.2-1.8 சென்ரிமீற்றர் நீளமுடையது. சாம்பல கலந்த மஞ்சள் நிறமானவை. சுற்றுக் கனியம் மென்மையானது. பல விதைகளைக் கொண்டது. கடும் மண்ணிறமானது. பூக்களை சித்திரை- வைகாசி மாதங்களில் காணலாம்.



### பரம்பலும் இனவிருத்தியும்

விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இலங்கையில் மத்திய மாகாண பகுதியில் வளரக்கூடியது. யாழ்ப்பாணத்தில் வளரும் இயல்பு இல்லாவிடினும் யாழ்ப்பாண மக்களால் பொதுவாக உலர் கனியாக கடைகளில் வாங்கி பயன்படுத்தப்படுகின்றது.

### மருத்துவப் பயன்கள்

யாழ்ப்பாண மக்கள் பொதுவாக வாசனைப் பொருட்களாகவே பல சிற்றுண்டிகள், உப உணவுகள் தயாரிக்கப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் ஏலத்தின் மருத்துவ குணங்கள் பல உண்டு. இதன் உலர் கனியும் விதைகளும் மருந்து தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றது.

❋ ஏலக்காய் விதை (ஏலரசி), ஓமம், சீரகம் ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ள வேண்டும். இதில் 3 வேளையும் உணவுக்கு பின் 3 கிராம் அளவிற்கு சாப்பிட்டால் அஜீரணக்கோளாறுகள் நீங்கும்.

❋ ஏலரசி, சுக்கு (வேர்க்கொம்பு), கராம்பு, சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டால் குடல்புண், வயிற்று வலி போன்றவை குணமாகும்.

❋ ஏலக்காய் (கனியுறையுடன் சேர்த்து) 100 கிராம் பனைவெல்லம்/ கல்லாக் காரம் (200 கிராம்) இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து தினமும் 5 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் அடிக்கடி உண்டாகும் தலைவலி, மயக்கம் போன்றவை தீரும்.



❋ ஏலக்காய் போட்டு கொதிக்க வைத்த தண்ணீரில் வாய்கொப்பளித்தால் வாய் நாற்றம், பல் ஈறுகளில் ஏற்படும் புண் போன்றவை குணமாகும்.



❋ ஏலக்காய், வெள்ளரி விதை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து காலை, மாலை இருவேளையும் 2 கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் நீர் அடைப்பு மற்றும் கல் அடைப்பு குணமாகும்.

❋ ஏலக்காய், சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து எலுமிச்சம் சாற்றில் ( 100 மில்லி), ஊறவைத்து காயவைக்கவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து தேனோடு கலந்து சாப்பிட்டால் தலைவலி, வயிற்றெரிவு குணமாகும்.

❋ ஏலக்காய், அமுக்கரா ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் இரவு உணவுக்குப் பின்னர் 5 கிராம் அளவு சாப்பிட்டு சூடான பால் குடித்தால் நரம்புகள் பலப்படும்.

❋ ஏலக்காய், எள்ளுப்புண்ணாக்கு, முருங்கைக்கீரை மூன்றையும் காய்ச்சிக் குடித்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும். கண்பார்வை தெளிவாகும்.

❋ ஏலக்காய், ஆவாரம்பூ, வேர்க்கொம்பு ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 5 கிராம் எடுத்து 1/2 லீற்றர் தண்ணீரில் போட்டு பாதியாகச் சுண்டக்காய்ச்சி குடித்தால் இதய நோய், இதய பலவீனம் போன்றவற்றிற்கு சிறந்தது. நீரிழிவுநோயாளிகளும்பயன்படுத்தலாம்.

❋ ஏலக்காய், கொத்துமல்லி, நெருஞ்சி ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் ஒரு தேக்கரண்டி பொடியை பசுவின் பால் 200 மில்லியில் கலந்து சாப்பிட்டால் சிறுநீரக கற்கள் கரையும்.

❋ சீரகம், ஏலக்காய், அதிமதுரம் , நெற்பொரி, வேர்க்கொம்பு, விளாமரத்து இலை (காயவைத்தது) மல்லி, பச்சைப்பயறு, சிற்றாமுட்டிவேர் ஆகியவற்றை சமஅளவாக எடுத்து தூளாக இடித்து தூள் அளவிற்கு 8 மடங்கு நீர்விட்டு ஒரு பங்காக சுண்டக்காய்ச்சி ஆறிய பின்பு வடிகட்டி 60 மில்லி அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் அருந்தி வர பித்தம் சம்பந்தமான நோய்கள் வராது.வயிறு உளைச்சலும் குணமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

❋ புதினா இலைகளுடன் ஏலக்காயை பொடித்து 200 மில்லி தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி காலை, மாலை 2 நாட்கள் சாப்பிட சமிபாடு இன்மை நீங்கி குடல் பலப்படும்.

❋ சீரகம், மிளகு, ஏலக்காய், வேர்க்கொம்பு ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து இடித்து மண்சட்டியில் போட்டு 400 மில்லி நீர்விட்டு 100 மில்லி ஆக சுண்டக்காய்ச்சி 50 மில்லி அளவு காலை, மாலை அருந்த காய்ச்சல் குணமாகும். காய்ச்சல் இருக்கும் போது குடிநீரை அளவான சூட்டோடு அருந்த வியர்த்து, சிறுநீரும் நன்கு வெளியேறும்.

❋ லவங்கப்பட்டை, ஏலம், வேர்க்கொம்பு ஆகியவற்றை இடித்துப்பொடி செய்து தினசரி ஒரு கிராம் அளவு உணவுக்கு முன்பு சாப்பிட அஜீரணம், உணவு மீது வெறுப்பு ஆகியவை நீங்கும்.

# அகதி அந்தஸ்து கோருவோருக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்

## அவுஸ்.மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

சர்வதேச அகதிகள் சாசனத்திற்கு அமைய அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நிலையில் இந்த உத்தரவு அவுஸ்திரேலிய குடிவரவு தரப்புக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்தவர் உட்பட 50 பேரை அவுஸ்திரேலியாவிலிருந்து வேறு ஒரு நாட்டிற்கு அனுப்ப தீர்மானித்திருந்த நிலையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர மனுதாரரை தடுத்து வைப்பது சட்டவிரோதமானது என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

வழக்கு விசாரணைகளை தொடர்வதற்கான அனுமதியை வழங்கியுள்ள மேல் நீதிமன்றம் மனிதவுரிமைகள் ஆணையகத்தைச் சேர்ந்தவர்களும் மேலும் இருவரும் மனுதாரரை சென்று சந்திப்பதற்கான அனுமதியினையும் வழங்கியுள்ளது.

(அ-2)

# மன்னாரில் போதைப்பொருள்

(மன்னார்)

மன்னாரில் 77 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. வட இந்தியாவின் இராமநாதபுரம் பகுதியிலிருந்து படகு மூலம் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு இந்தியர்களும் ஒரு இலங்கையரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

வடக்கு புலனாய்வு பிரிவினருக்கு இந்தியாவில் இருந்து கிடைக்கப் பெற்ற உளவுத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். 750 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

# தேர்தலில் யாருடன் கூட்டிணைந்தாலும் 13 ஆம் திருத்தத்திற்கு முன்னுரிமையாம்

## மு.கா.பொதுச் செயலாளர் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் தேர்தலில் யாருடன் கூட்டிணைந்தாலும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை முறையாக அமுலாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக காங்கிரஸின் பொது செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில், கூட்டிணையும் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்பதையும் கட்சியின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொத்துவிலில் தமது உறுப்பினர்களை சந்தித்து கிழக்கு மாகாணசபை தேர்தல் தொடர்பில் விரிவாக கலந்து பேசிய போதே அதன் உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் மட்டக்களப்பின் உன்னிச்சை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிக்கவில்லை.

எனினும் தற்போது அந்த நிலைமை மாற்றியுள்ளது. முஸ்லிம்களுக்கு கிழக்கில் விவசாயத்தை மேற்கொள்ளவும் அவர்களின் நிலங்களை மீளப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உறுப்பினர்கள் கோரியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 10 வருடங்களில் 44 மில்லியன் பேர் தொற்றாநோயால் இறக்க நேரிடும்

## உலக வங்கி அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தெற்றா நோய்கள் காரணமாக அடுத்துவரும் பத்து வருடங்களில் 44 மில்லியன் பேர் உலகில் உயிரிழப்பர் என்று உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் தொற்றா நோய் காரணமாக தென்னாசிய நாடுகளில் 10.4 மில்லியன் பேர் உயிரிழப்பர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நால்வரில் ஒருவர் தொற்றா நோயான நீரிழிவு நோயின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கையின் அரசாங்க வைத்தியசாலைகளில் உயிரிழப்பவர்களில் பெரும்பகுதியினர் தொற்றா நோய்களுக்கு உள்ளானவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களை தவிர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஆசியக் கூட்டமைப்பு இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று ஒழுங்கு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

2012.06 20

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1631-பால்ட்டிமோர் என்ற ஐரிய ஊர் அல்ஜீரிய கடற் கொள்ளைக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டது.

★ 1756-கொல்கத்தாவில் நவாப்புகளினால் பிரித்தானியப் படைவீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

★ 1791-பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனும் அவனது குடும்பமும் வரெனெஸ் நகருக்குத் தப்பியோடினர்.

★ 1837-விக்டோரியா பிரித்தானியாவின் அரசியாக முடி சூடினார்.

★ 1858-இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி 1857 முடிவுக்கு வந்தது.

★ 1862-ருமேனியாவின் பிரதமர் பார்பு கட்டார் ஜியூ படுகொலை செய்யப்பட்டார்.

★ 1863-மேற்கு வேர்ஜீனியா ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.

★ 1877-அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதலாவது வர்த்தக தொலைபேசிச் சேவையை கனடாவின் ஹமில்ட்டன் நகரில் ஆரம்பித்தார்.

★ 1900-பொக்சர் படைகள் பீக்கிங்கில் நூற்றுக்கணக்கான ஐரோப்பியர்களைக் கொன்றன.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்ஸ் கடல் சமர் அமெரிக்கக் கடற்படையின் பெரு வெற்றியில் முடிபடைந்தது.

★ 1960-மாலி, செனகல் ஆகிய நாடுகள் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தன.

★ 1978-கிறீசில் 6.5 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவானது.

★ 1990-யூரேக்கா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1991-ஜேர்மனியின் தலைநகரம் பொன் இலிருந்து பேர்லினுக்கு மீண்டும் மாற்ற பாராளுமன்றத்தில் முடிபு செய்யப்பட்டது.

★ 2001-பாகிஸ்தானின் ஜனாதிபதியாக பர்வேஸ் முஷாரப் பதவியேற்றார்.

★ 2003-விக்கிமீடியா அமைப்பு உருவானது.

## இறப்புக்கள்

★ 1971-மகாகவி உருத்திரமூர்த்தி , ஈழத்துக் கவிஞர் (பி.1927)

★ 2005-ஜாக் கில்பி, அமெரிக்க மின்னியல் பொறியாளர் (பி.1923)

★ 2006-சுரதா, தமிழகக் கவிஞர்

## சிறப்பு நாட்கள்

★ உலக அகதிகள் தினம்

★ ஆர்ஜென்டீனா- கொடி தினம்




★ 1969-இலங்கைத் துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரியவின் பிறந்த தினம்

# தாய்மண் அபகரிப்பு தடுக்கப்படுமா?

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் *அவசர* பயணம் மேற்கொண்டு இலங்கைக்குச் செல்லவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக விரைவில் பதவி ஏற்கவுள்ள மிச்செல் சிஷன், அதற்கு முன்னதாகவே இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்திற்குரியவராகி விட்டார்.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகளை கையகப்படுத்தும் முயற்சியில் இலங்கை இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்தவாரத்தில் பெருமளவில் பேசப்படுகின்ற விடயங்களாக இவை மூன்றும் அமைந்துள்ளன. சிவ்சங்கர் மேனன் இப்போதுதான் முதன்முறையாக இலங்கைக்கு விஜயம் செய்பவரல்ல. அவர் வகிக்கும் பதவிக்கு இயைபுடையதாகவே அவரது பயணங்கள் எப்போதும் தீர்மானிக்கப்படும்.

இந்தமாத இறுதியில் அவர் மேற்கொள்ள இருக்கும் இலங்கைப் பயணத்தை *அவசர* பயணம் என்று பல ஊடகங்களும் வர்ணித்துள்ளன. ஓரிரு நாட்களுக்குள் திடீரென மேற்கொள்ளப்படும் பயணங்களையே *அவசர* பயணம் என்று சொல்வதுண்டு.

ஆனால், இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளவுள்ள பயணத்தை அவசரமானது என்று கருத முடியாது. முக்கியமான பயணம் என்று இதனைக் குறிப்பிடுவது பொருத்தமானது.

திருமலையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே துருப்பிடித்த பிரித்தானியர்களின் எண்ணெய்க் குதங்களை இலங்கையிடமிருந்து இந்தியா, நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்திருந்தது. இந்தக்குத்தகை ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசு இரத்துச் செய்யப்போவதாக வந்த செய்திகளைத் தொடர்ந்து சிவ்சங்கர் மேனன் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. இலங்கை மீதான ஜெனீவாத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு வழங்கியதை விரும்பாத காரணத்தால் இலங்கை இப்படியான முடிவை எடுத்ததாக கொழும்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அமைச்சர் பீரிஸ் அமெரிக்கா சென்று ஹிலாரி கிளிங்ரனிடம் கையளித்த செல்நெறிப் பாதைக்கான திட்ட வரைபு பற்றி இந்தியாவுக்கு எதுவுமே இலங்கையால் தெரிவிக்கப்படாததையும் முக்கியமானதாக சிலர் சொல்கின்றனர்.

சீனாவையும் இந்தியாவையும் சமகாலத்தில் இடமும் வலமுமாக வைத்திருந்த இலங்கை இப்போது இந்தியாவின் இடத்தில் அமெரிக்காவை அமர்த்த விரும்புகிறது என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இதில் எவ்வளவு தூரத்திற்கு உண்மை உள்ளது என்பது சில காலத்தின் பின்னரே தெரியவரும் இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக மிச்செல் சிஷன் என்ற மூத்த இராஜதந்திரியை ஒபாமா நிர்வாகம் நியமித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நடைபெறும் முக்கிய இராஜதந்திரிகள் இடமாற்றங்களில் ஒன்றாக இது அவதானிக்கப்படுகிறது.

**பனங்காட்டான்**

ஐக்கிய அரபுக் குடியரசு, லெபனான் ஆகிய நாடுகளில் அமெரிக்கத் தூதுவராக கடமையாற்றிய சிஷன் தற்போது ஈராக்கின் தலைநகரிலுள்ள தூதரகத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கின்றார்.

புதிய பதவியை ஏற்பதற்கு முன்னரே இலங்கை தொடர்பாக சில முக்கிய கருத்துகளை இவர் வெளியிட்டுள்ளார்.

**1. முள்ளிவாய்க்காலில், முடிவுற்ற போரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் இன்னமும் இடம்பெறவில்லை.**

**2. நல்லிணக்க முயற்சிகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன.**

**3. போர் இடம்பெற்ற இடங்களிலிருந்து படைத் தரப்பினர் அகற்றப்பட வேண்டும்.**




**4. காணாமற்போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பாக உரிய விசாரணைகள் இடம்பெறவேண்டும்.**

ஆகிய நான்கு விடயங்களையும் சுட்டிக் காட்டியுள்ள மிச்செல் சிஷன், மனித உரிமை விவகாரங்களுக்கே தமது நிகழ்ச்சி நிரலில் முதலிடம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசுக்கு ஒவ்வாமையான விடயம் மனித உரிமை மீறலை எவராவது சுட்டிக் காட்டுவது. அந்தப் புள்ளியில் நின்றே மிச்செல் சிஷன் தமது பணியை ஆரம்பிப்பதற்கு முன்வந்திருப்பதையிட்டு அரச தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

அமைச்சர்கள் சிலர் ஏற்கனவே சிஷன் மீது பாய்ச்சல் நடத்தியுள்ளனர். இப்படிப் பேசுவதற்கு மிச்செல் சிஷனுக்கு உரிமையில்லை என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிஷன் இவைகளைச் சுட்டிக்காட்ட உரிமையுள்ளவர் என்ற அமெரிக்க தரப்பின் பதிலும், தற்போதைய அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா



புட்டனிஸ், மன்னார் ஆயர் ராஜப்பு ஜோசெப்பு அவர்களை நேரில் சென்று சந்தித்து உரையாடியதும் இலங்கைத் தரப்பிற்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

வன்னி யுத்தத்தின்போது காணமற்போன 146, 679 பேர் எங்கே என்று கணக்கு கேட்ட ஆயருக்கு உலகெங்குமிருந்து ஆதரவுக் குரல் அதிகரித்து வருவது, இலங்கை அரசு விரும்பாத ஒன்று.

தமிழரின் தாயகமாகவும் அவர்களின் பூர்வீக மண்ணாகவும் சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையின் வடக்கு -கிழக்கு நிலப்பரப்பை சிங்கள- பௌத்த மயமாக்கும் முயற்சி தீவிரமடைந்து வருகின்றது.

இதற்கு ஏதுவாக முன்னாள் கடற்படைத் தளபதியொருவர் கிழக்கு மாகாண ஆளுநராகவும் முன்னாள் இராணுவத் தளபதியொருவர் வடமாகாண ஆளுநராகவும் இயங்கி வருகின்றனர். மற்றைய ஏழு மாகாண சபைகளின் ஆளுநர்களாக முன்னாள் அரசியல் வாதிகளே பதவி வகிக்கின்றனர் என்பதை கவனிக்க வேண்டும்.

டி.எஸ்.சேனநாயக்க ஆட்சிக்காலத்தில் திருமலை மற்றும் அம்பாறை பிரதேசங்களை இலக்குவைத்து சிங்களக் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம்பெற்றவேளை கிழக்கின் சனத்தொகையில் தமிழரே முதலிடம் வகித்தனர். அடுத்து முஸ்லிம்கள் இருந்தனர். சிங்களவர் தொகை ஆயிரக்கணக்காகவே இருந்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் (1990) முஸ்லிம்களும் சிங்களவர்களும் சேர்ந்து 60 வீதமாக, தமிழர் 40 வீதமாக குறைக்கப்பட்டனர் திட்டமிட்ட அரச குடியேற்றத்தின் விளைவு இது. அண்மைய கணக்கெடுப்பில் மூன்று இனங்களும் ஏறக்குறைய சரிசமமாகியுள்ளன.

கிழக்குக்கு ஏற்பட்ட நிலையே வடக்கிற்கு ஏற்படும் காலம் வந்துள்ளது. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள். கடலரிப்புப்போல சிங்கள இராணுவத்தால், கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இடம்பெயர்ந்தவர்களுக்கு அவர்களின் சொந்தநிலம் வழங்கப்படவில்லை. மாறாக, காட்டப்படுகின்றது.

கடந்த மூன்று வருடங்களில் பலநூற்றுக் கணக்கான புத்தர்சிலைகள் வன்னி மண்ணில் நாட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதற்காக இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதும் அங்குள்ள விக்கிரகங்கள், வாகனங்கள் களவாடப்படுவதும் அடித்து நொருக்கப்படுவதும் தொடர்கின்றது.

பலாலி விமானத் தளத்தை இந்தியா பொறுப்பேற்றுள்ளதால், அதற்கு நிகரான புதிய விமான நிலையம் ஒன்றை பூநகரியில் சீன அரசாங்கம் நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளது.

இதுதவிர, படைத்துறையினரின் பாவனைக்கென இரனணமடுவில் தனியானதொரு விமான நிலையம் அமைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் பொதுமக்களுக்குச் சொந்தமான 61 ஏக்கர் காணியையும் அதனோடு உள்ள வீடுகள், கட்டடங்கள், தோட்டங்கள், வர்த்தக நிறுவனங்களையும் பலாத்காரமாக கையகப்படுத்த இராணுவம் ஆரம்பித்துள்ளது.

கோப்பாய் இராச பாதையில் இருந்த மாவீரர் துயிலுமில்லத்தை நிர்மூலமாக்கி விட்டு, அதில் யாழ். கட்டளைத் தளபதியின் பிரதான முகாமை அமைத்துள்ள மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, நல்லூர்-கோப்பாய்-தெல்லிப்பழை ஆகிய பிரதேச சபை செயலர் பகுதிகளிலிருந்து 61 ஏக்கர் காணியை இராணுவத்தினருக்காக பறித்தெடுக்க முயற்சி செய்கின்றனர்.

ஏற்கனவே இராணுவப் பாதுகாப்பு வலயங்களுக்கு மேலானதாக தனியாருக்கு சொந்தமான இந்த 60 ஏக்கர் காணிகளும் அமைகின்றன.

குடாநாட்டில் 716 தனியார் காணிகளையும் சொத்துக்களையும் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவம் பயன்படுத்தி வருகின்றது. இதில் 371 காணிகளில் வீடுகள் உண்டு. 41 காணிகளில் வர்த்தக நிறுவனங்கள் அமைந்துள்ளன. 283 காணிகள் கட்டடங்கள் எதுவும் இல்லாதவை.

**நன்றி: இணையம்**

# திருவடி நிலையிலிருந்து 200 மீ தூரத்தில் பௌத்த விகாரை!

20 ஆண்டுகளுக்கு முன்னர் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்ட மாதகலை இலக்குவைத்து பிரதான நகர்வொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

'பாரிய புத்தவிகாரை பௌத்த யாத்திரிகர் தங்கு விடுதி, பிக்குகளுக்கான இருப்பிடம் ஆகியவற்றுடன் சிங்களக் கடற்படைக்காக நவீன இறங்குதுறைகள் கொண்ட முகாம் என்பன, இங்கு அமைக்கப்படுகின்றன. சகல வேலைகளும் முடிந்த பின்னர் மாதகலை புனித நகரமாகப் பிரகடனம் செய்வதே அரசாங்கத்தின் திட்டம்.

இந்து மக்களின் புனிதப் பிரதேசமான திருவடி நிலையிலிருந்து, 200 மீற்றர் தூரத்தில் புதிய விகாரை நிர்மாணிக்கப்படுவதிலிருந்து பௌத்த பரப்புரையை, மற்றைய மதத்தினர் புனிதமாகப் போற்றும் இடங்களில் எவ்வாறு புகுத்துகின்றனர் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

குடாநாட்டின் பிரதான வீதிகளும் தெருக்களும் சிங்கள மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டிற்குள் யாழ்குடா நாட்டில் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களைக் குடியேற்றவும் சிறியதும் பெரியதுமாக ஆயிரக்கணக்கான பௌத்த விகாரைகளை அமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இப்போது இடம்பெறுவது அதன் முதற்கட்டம் எனவும் படையினர் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகம், தமிழர் பூர்வீக நிலம், தமிழர் பிரதேசம் என்று எதுவுமே இருக்கக்கூடாது என்பதில் இலங்கை அரசு மிகவும் அக்கறையாகச் செயற்படுகின்றது.

தமிழர் தரப்பிடம் சிங்களக் கொடியை ஏந்தக் கொடுப்பதில் அக்கறை காட்டியரணிலும் அவரது ஐ.தே.க.வும்கூட குடாநாட்டை சிங்கள மயமாக்குவதற்கு ஆதரவாகவே இருந்து வருகின்றனர்.

ஜெனீவாத் தீர்மானம் வழங்கிய ஓராண்டு முடிவிற்குள் குடாநாடு தனது அடையாளத் தை இழந்துவிடலாம் என்ற அச்சம் மண்ணோடு மண்ணாக வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால்கூட தாய்மண் பறிபோவதைத் தடுக்கமுடியுமா என்பது சந்தேகமாகவுள்ளது.

# அரசியலில் பதவி கிடைக்கும் ஜாதக அமைப்பு எது?

ஒருவரது ஜாதகத்தில் பிதுர்காரகனாகிய சூரிய பகவான் ஜென்ம லக்னத்தில் வீற்றிருக்க அவர் நல்ல புத்திமானாக திகழ்வார். அரசியல் ஆலோசகராக இருப்பார். கண்களிலும் வயிற்றிலும் வியாதி உண்டு. நல்ல குணம் இருக்கும். அடிக்கடி கோபப்படுவார். துச்சமாக பேசுவார். கூர்மையான அறிவு இருக்கும். எதையும் சமாளிப்பார். உணவைக் குறைவாக உண்பார். சமயத்திற்கு தகுந்தது போல் பேசுவதில் வல்லவர் இவர்.

ஜென்ம லக்னத்தில் சந்திர பகவான் இருந்தால் அவர் அழகிய தோற்றம் உடையவராக இருப்பார். சாஸ்திரங்களில் ஞானம் உள்ளவராகவும் ராஜாக்களுக்கும் பிரியமானவராகவும் இருப்பார். வசீகரமான தோற்றத்துடன் புத்திசாலித்தனமாக பேசுவார். நல்ல தனத்தையும் புகழையும் அடைவார். பலர் முன்னிலையில் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்துவார்.

அங்கார பகவான் ஜென்ம லக்னத்தில் இருக்க உடம்பில் தழும்பு உண்டாகும். துஷ்டர்களை அடக்குவார். தைரியமுள்ளவராக இருப்பார். எதையும் துணிச்சலுடன் சாதித்துக் காட்டுவார். நிறைய பணம் புழங்கக்கூடியவராக இருப்பார். சலனப்படக்கூடியவராகவும் இருப்பார். எதிர்பாராத நூதன வியாதிகளால் தொல்லை அடைவார். இவருக்கு வாதரோகம் ஏற்பட்டு நிவர்த்தியடையும். பெரிய கண்களை உடையவர் இவர். இடம்விட்டு இடம்பயணம் செய்வதில் பிரியம் உள்ளவராகவும் திகழ்வார்.

புதன் பகவான் ஜென்ம லக்னத்தில் இருந்தால் அத்தகையவர் சுயமாக பல வித்தைகளை கற்பார். ஒழுக்கத்தில் நாட்டம் அதிகம் இருக்கும். ஒரு கூட்டத்திற்கோ அல்லது கிராமத்திற்கோ தலைவராக விளங்குவார். மந்திரங்களை கற்று சித்தி செய்யக் கூடியவராகவும் திகழ்வார். உக்ரமான மந்திரங்களை சுலபமாக கற்பார். சித்து வேலைகளில் நாட்டம் இருக்கும்.

பெருமைகள் பல பெற்று புண்ணிய நதிகளில் நீராடுவார். ஜோதிடம் தர்க்க சாஸ்திரம், கணிதம் போன்றவற்றில் வல்லவராக இருப்பார். புதன் மேலும் பலமடைய விசேட தெய்வ பூஜை செய்வார்.

புதன் பலவீனமடைந்தால் நீச்ச தெய்வங்களை உபாசனை செய்வார். சூதாட்டங்களில் பணம் சம்பாதிப்பார். புதனுடன் சுபக்கிரகம் கூட தர்ம சிந்தனையுடன் வாழ்வார். நூதன கணிதம் கற்பார். தான தர்மங்கள் அதிகம் செய்வார்.

சுக்ர புகவான் ஜென்ம லக்னத்தில் வீற்றிருக்க அத்தகைய ஜாதகம் அமைந்தவர் காலக்கணிதம் அறிவார். நீண்ட ஆயுள் இருக்கும். மனைவி, குழந்தைகளிடம் பிரியம் உள்ளவராக திகழ்வார். வாசனை திரவியங்கள் அதிகம் உபயோகிப்பர்.

சுருண்ட தலைமுடி, வசீகரக் கண்களுடன் விளங்குவார். அநேகவித நூதன ஆபரணங்கள் அணிவார். பாபக்கிரகம் சம்பந்தம் ஏற்பட்டாலும் நீச்சம்




அடைந்தாலும் சூழ்ச்சி செய்வதில் வல்லவர் இவர். நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லையுண்டு. அறுவை சிகிச்சை பயம் இருக்கும். யோகக்கிரகங்கள் பார்த்தாலோ சம்பந்தப்பட்டாலோ உயர்ந்த வாகனங்களை பெறுவார். பிரபலமடைவார். அபூர்வ இரத்தினங்கள், மாணிக்கங்கள் இவரைத்தேடி வரும்.

ஜென்ம லக்னத்தில் சனி புகவான் அமையப் பெற்றவர்கள் ஒரு பட்டினத்திற்கு தலைவனாக திகழ்வார்கள். பூரண பலம் பெற்ற சனிபகவான் இவர்களுக்கு அதிகாரத்தை வாரி வழங்குவார். முன்னோர்கள் சொத்தை நன்கு அனுபவிப்பார்கள். யோகக் கிரகங்கள் சம்பந்தம் ஏற்பட்டால் அரசியல் தலைவனாக விளங்குவார்கள்.

நீச்சக்கிரகத்தால் பார்க்கப்பட்டால்- சேர்த்தால் மற்றவர் தயவால் வாழ்க்கை நடத்துவார்கள். உடலில் ஏதாவது ஒரு இடத்தில் ரணம் உண்டு. மேலும் துர்தேவதைகளை உபாசனை செய்வார்கள்.

இராகு ஜென்ம லக்னத்தில் இருந்தால் குழந்தைகளால் மன வருத்தம் இருக்கும். ராகு பூரண பலம் பெற்ற கிரகங்களுடன் சேர்ந்தாலோ அல்லது பார்க்கப்பட்டாலோ ராஜாக்களுக்கு பிரியமானவராக இருந்து ராஜயோகத்தை அனுபவிப்பார். தயவு தாட்சண்யமில்லாமல்லாமல் செயற்பாடுவார். குறிக்கோளில் உறுதியாக இருப்பார்.

கேது ஜென்ம லக்னத்தில் இருந்தால் அத்தகையவர்களுக்கு குழந்தைகளால் கலக்கம் இருக்கும். சுபக்கிரக பார்வை ஏற்பட அரச யோகம் ஏற்படும். ஞானத்தில் நாட்டம் இருக்கும். பித்த வியாதியால் சிரமப்படுவார். முகத்தில் ஏதாவது ஒரு அடையாளம் உண்டாகும். வித்தியாசமான மந்திரங்களை கற்க பிரியப்படுவார்.

பிரகஸ்பதியான குருபகவான் ஜென்ம லக்னத்தில் இருக்க பூரண பலமும் பெற்றால் அத்தகைய ஜாதகர் வேதங்கள் கற்பார். புகழ் பெற்ற குழந்தைகளை வாரிசாகப் பெறுவார். புதிய மொழிகளில் நல்ல ஞானம் இருக்கும். சிறுவயதிலேயே தலைமை தாங்குவார். குரு நீச்சம் பெற்ற பலவீனமாக இருக்க மனதில் சஞ்சலங்கள் உண்டாகும்.

சொந்த இடத்தை விட்டு மாறுவார். அதிக கோபம் கொண்டவராக இருப்பார். பிற்காலத்தில் அறக்கட்டளை அல்லது தர்ம ஸ்தாபனத்தை ஆரம்பிப்பார்.

## தனவந்தரின் தாராள மனம்

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலய கட்டட புனர்நிர்மாணப்பணிகள் 125.9 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பமாகியுள்ளது.



கடந்த போர்க்கால சூழல் காரணமாக மேற்படி பாடசாலைக்கட்டடங்கள் முற்றாக சேதமடைந்திருந்தன.

இதனைக் கருத்திற்கொண்டு இதற்கான முழு நிதி உதவிகள் ஜரிஷ் குடியரசைச் சேர்ந்த தனவந்தரான கத்திரல் ரேன் ருஸ்ட் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியினைக் கொண்டு இவ் வித்தியாலய கட்டடப் பணிகள் யாவற்றினையும் யுனிசெப் நிறுவனம் முன்னின்று நடத்தவுள்ளது.

இதன் அடிப்படையில் 200 அடி நீளமான மூன்று மாடிக் கட்டடம் ஒன்றும் 200 அடி நீளமான 2மாடிக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு அதனுள்36 வகுப்பறைகளும் விஞ்ஞான கூடம், நூலகம் ஆகியவற்றுக்கான கட்டட வேலைகளும் துரித கதியில் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2-84)

## ஆ.மத்திய நிலைய மீளாய்வுக்கூட்டம்

(மல்லாவி)

வடமாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிற்கு கீழ் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையங்களில் கடமையாற்றும் முகாமையாளர்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல், ஆங்கிலம் தொடர்பான அலுவலர்கள் ஆகியோருக்கான இந்நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள வடமாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெறும்.

ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் சமூகம் தரும்போது நடப்பாண்டுக்குரிய இதுவரையுமான மாதாந்த பணி நிறைவேற்று அறிக்கையின் பிரதிகளை தவறாது எடுத்து வரவேண்டுமென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-3-15)

## சிறையிலிருந்து தப்பிக்க முயற்சித்த கைதிகள் கைது

### வெலிக்கடைச்சிறையில் சம்பவம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்த கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மூன்று முக்கிய குற்றவாளிகள் இவ்வாறு தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

சிறைச்சாலையின் மரவேலைப்பகுதியின் சுவர் கற்களை நுட்பமாக அகற்றி அதன் வழியாக வெளியேறி மதில் வழியாக தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் திறமை காரணமாக குறித்த கைதிகள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை தடுப்பதற்கு சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்ததாகவும் இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் கைதிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

## மஹா கும்பாபிஷேகம்

(பூநகரி)

பூநகரி கொல்லகுறிச்சி சங்கரி தறைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை தொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று அதனைத்தொடர்ந்து சிவஸ்ரீ அ.அர்த்தநாரீஸ்வரக்குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து 10 நாட்கள் விசேட அபிஷேகம் இடம்பெறும்.

இறுதிநாள் சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ.துரைசிங்கம் தெரிவித்தார். (அ-84)


## மரண அறிவித்தல்

### சிவனடியார் சுவாமிநாதன்



சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனடியார் - சுவாமிநாதன் என்பவர் 18.06.2012 திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர். (8670)







# சிறுவர் அரங்கம்

136

# கல் ஒன்று! சாட்சிகள் பல!

## மரியாதைராமன் கதைகள்



ஓர் ஊரில் முத்தையன் என்ற வணிகன் இருந்தான். அவனிடம் விலை உயர்ந்த கெம்புக்கல் ஒன்று இருந்தது.

வணிக வேலையாக அவன் வெளியூர் செல்ல வேண்டி வந்தது.

தன் நண்பன் மணியின் வீட்டிற்குச் சென்றான் அவன்.

நண்பா! விலை உயர்ந்த கெம்புக் கல் இது. இதன் மதிப்பு ஆயிரம் பொற்காசுகள்.

நான் வெளியூர் செல்ல வேண்டியுள்ளது. திரும்பி வரப்பல மாதங்கள் ஆகும். அதுவரை இந்தக்கல் உன்னிடம் பாதுகாப்பாக இருக்கட்டும். நான் ஊரிலிருந்து திரும்பியதும் வாங்கிக் கொள்கிறேன் என்றான்.

நண்பனுக்கு உதவி செய்யாமல் இருப்பேனா? என்றான் மணி. அவனிடம் கெம்புக்கல்லைத் தந்து விட்டுப் புறப்பட்டான் முத்தையன்.

சில மாதங்கள் கழிந்தன. ஊர் திரும்பிய முத்தையன் மணியின் வீட்டிற்கு வந்தான். நண்பா! நான் தந்த கெம்புக்கல்லைத் தா என்று கேட்டான். அவனை ஏமாற்ற நினைத்தான் மணி.

நீதான் முன்னரே வந்து கெம்புக் கல்லை வாங்கிச் சென்றாயே. நினைவு இல்லையா? மீண்டும் வந்து கேட்கிறாயே என்றான்.

திகைத்த முத்தையன் எப்பொழுது உன்னிடம் கெம்புக்கல்லை வாங்கினேன்? ஏன் இப்படிப் பொய் சொல்கிறாய்? என் கெம்புக்கல்லைத் தந்து விடு என்றான்.

நான் பொய் சொல்கிறேனா? நீ என்னிடம் கெம்புக் கல்லை வாங்கியதைப் பார்த்த சாட்சிகள் இருக்கிறார்கள்.

சாட்சிகள் இருக்கிறார்களா? யார் அவர்கள்? நீ வந்த போது மூன்று பேர் இங்கே இருந்தார்கள். துணி வெளுப்பவன், பானை செய்பவன், முடி திருத்துபவன். இவர்கள் மூவருமே அந்த சாட்சிகள். நான் கெம்புக்கல்லை உன்னிடம் தந்ததை அவர்கள் பார்த்தார்கள்.

அவர்கள் மூவரும் உன்னிடம் வேலை பார்ப்பவர்கள். உன் சார்பாகவே சாட்சி சொல்வார்கள். என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்? என்று கோபத்துடன் கத்தினான் முத்தையன்.

உன்னிடம் வாங்கிய கெம்புக் கல்லைத் தந்து விட்டேன். அதற்குச் சாட்சிகள் இருக்கிறார்கள். உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள் என்று கண்டிப்புடன் சொன்னான் மணி.

ஐயோ! இப்படி ஏமாந்து விட்டோமே. என்ன செய்வது என்று கலங்கினான் முத்தையன். நீதிபதி மரியாதைராமனிடம் சென்றான் அவன். நடந்ததை எல்லாம் சொன்னான். நீங்கள் மணியை அழைத்து விசாரிக்க வேண்டும். என் கெம்புக் கல்லை மீட்டுத் தர வேண்டும் என்று வேண்டினான்.

மணியை நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் அவர். இவர் உம்மிடம் கெம்புக்கல்லைத் தந்ததாகச் சொல்கிறார். திரும்பக் கேட்ட போது இல்லை என்கிறீராமே என்று கேட்டார்.

நீதிபதி அவர்களே! இவர் என்னிடம் கெம்புக்கல்லைத் தந்தது உண்மை தான். இரண்டு நாட்களுக்கு முன் என் வீட்டிற்கு வந்தார். கெம்புக்கல்லை வாங்கிச் சென்றார்.

அப்பொழுது என் வீட்டில் மூன்று பேர் இருந்தார்கள். மீண்டும் இவர் வந்து கெம்புக்கல்லைக் கேட்டார். முன்னரே தந்து விட்டேனே என்றேன். இங்கு வந்து வழக்கு தொடுத்து உள்ளார் என்று நல்லவனைப் போலப் பேசினான்.

உம் வீட்டில் மூவர் இருந்ததாகச் சொல்கிறீரே. அவர்கள் யார்? என்று கேட்டார் நீதிபதி.

அப்பொழுது என் வீட்டில் துணி வெளுக்கும் மாயாண்டி இருந்தான். பானை செய்யும் மலையாண்டியும் முடிதிருத்தும் முனியாண்டியும் இருந்தனர்.

நான் கெம்புக் கல்லைக் கொடுத்ததை அவர்கள் பார்த்தார்கள். நீங்கள் அவர்களை விசாரிக்கலாம். என்றான் மணி. அவர்கள் மூவரையும் நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் நீதிபதி. உண்மையைச் சொல்லுங்கள். பொய் சொன்னால் கடுமையான தண்டனை கிடைக்கும். இவர் முத்தையனிடம் கெம்புக்கல்லைத் தந்தாரா? நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டார்.

ஆமாம் இவர் முத்தையனிடம் கெம்புக்கல்லை தந்தார். நாங்கள் பார்த்தோம் என்று மூவரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

முத்தையனோ கெம்புக் கல்லை வாங்கவில்லை என்கிறான்.

மணியோ தந்து விட்டதாகச் சொல்கிறான். இவர்கள் மூவரும் அதைப் பார்த்ததாகச் சொல்கிறார்கள்.

எப்படி உண்மையைக் கண்டு பிடிப்பது?

ஒன்றும் புரியவில்லையே என்று குழம்பினார் அவர்.

நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

காவலர்களை அழைத்தார் அவர்.

இவர்கள் ஐவரையும் தனித்தனி அறைகளில் தங்க வையுங்கள். ஒருவரோடு ஒருவர் பேசக்கூடாது ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடாது.

ஒவ்வொருவரிடமும் களிமண் உருண்டை ஒன்றைக் கொடுங்கள். இவர்கள் ஐவரும் கெம்புக்கல்லைப் பார்த்து இருக்கிறார்கள்.

களிமண்ணால் அதே போன்ற வடிவம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாதவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்.

அவர்கள் செய்த களிமண் வடிவங்களை சிறிது நேரத்தில் வாங்கி வாருங்கள் என்று கட்டளை இட்டார்.

அதன்படியே காவலாளர்கள் அவர்கள் ஐந்து பேரையும் அழைத்துச் சென்றார்கள். தனித்தனி அறைகளில் தங்க வைத்தார்கள்.

முத்தையன் கெம்புக்கல்லைப் போலவே களிமண்ணால் வடிவம் செய்தான். மணியும் அதே போலச் செய்தான்.

ஏனைய மூவரும் கெம்புக்கல்லைப் பார்த்ஒது இல்லை. அது எப்படி



இருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை.

களிமண்ணில் எந்த வடிவத்தைச் செய்வது என்று குழம்பினார்கள்.

துணி துவைக்கும் கல்லின் நினைவு மாயாண்டிக்கு வந்தது. களிமண்ணில் அதேபோல வடிவம் செய்தான்.

மலையாண்டியோ பானை செய்யும் சக்கரம் போல வடிவம் செய்தான். முனியாண்டி சாணை தீட்டும் கல்லைப் போல செய்தான்.

காவலர்கள் அவர்கள் ஐவரிடம் இருந்தும் களிமண் வடிவத்தை வாங்கினார்கள். அவற்றை நீதிபதி மரியாதை ராமனிடம் தந்தார்கள்.

எந்தக் களிமண் வடிவம் யார் செய்தது என்பதைச் சொன்னார்கள்.

அவர்கள் ஐவரையும் இங்கே அழைத்து வாருங்கள் என்றார் அவர்.

ஐவரும் அங்கே அழைத்து வரப் பட்டார்கள்.

முத்தையனும் மணியும் செய்த களி மண் வடிவத்தைக் காட்டினார் அவர்.

நீங்கள் இருவரும் கெம்புக்கல்லைப் பார்த்திருக்கிறீர்கள். அதனால் உங்களின் களிமண் வடிவம் ஒன்று போலவே உள்ளது.

ஏனைய மூவரும் கெம்புக்கல்லைப் பார்த்ததே இல்லை. அதனால் உங்களுக்குத் தோன்றியது போல வடிவம் செய்துள்ளீர்கள்.

கெம்புக்கல்லை முத்தையனிடம் மணி திருப்பித் தரவில்லை. நீங்கள் மூவரும் அதைப் பார்க்கவில்லை. உங்கள் செயல்களால் இது உறுதி ஆகிறது.

நீதிமன்றத்தில் ஒருவர் பொய் சொன்னார்.

ஏனைய மூவரும் பொய்ச் சாட்சி சொன்னீர்கள்.

இந்தக் குற்றங்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? என்று கோபத்துடன் கேட்டார் அவர்.

உண்மை வெளிப்பட்டு விட்டதே என்று நடுங்கினான் மணி.

நீதிபதி அவர்களே! விலை உயர்ந்த கெம்புக் கல்லுக்கு ஆசைப்பட்டேன். தவறு செய்து விட்டேன். என்னை மன்னியுங்கள் என்று வேண்டினான்.

பொய் சாட்சி சொன்னதற்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ? தப்பிக்க வழி இல்லையே என்று மூவரும் நடுங்கினார்கள்.

ஐயா! நாங்கள் அந்தக் கெம்புக் கல்லைப் பார்த்தது இல்லை. இவர் தான் பொய் சாட்சி சொல்லச் சொன்னார். இவரால் வாழ்கின்ற நாங்கள் எப்படி மறுக்க முடியும்?

தெரியாமல் பொய் சாட்சி சொல்லி விட்டோம். இனி இப்படி நடந்து கொள்ள மாட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள் என்று மூவரும் கெஞ்சினார்கள்.

ஏமாற்ற முயன்றதற்காக மணிக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

பொய் சாட்சி சொன்ன மூவரும் அறியாமல் செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வார சிறைத்தண்டனை விதிக்கிறேன் என்றார் நீதிபதி மரியாதைராமன்.

காவலர்கள் அவர்களைச் சிறைக்கு இழுத்துச் சென்றனர்.

மணியிடம் பெற்ற கெம்புக் கல்லை முத்தையனிடம் தந்தார் நீதிபதி.

நீதிபதி அவர்களே! இழந்த பொருளை உங்களால் பெற்றேன். நன்றி! என்று அவரை வணங்கி விட்டுப் புறப்பட்டான் அவன்.

# பல்கலைக்கு தெரிவாகாதோருக்கு அரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்




தேவைகள் அதிகரித்து, தேடல்கள் மழுங்கி விட்ட தேசத்தில் தேடுவாரற்ற பாமரரை தெருவிற்குச் கொண்டு வந்து ஆக்கவும்-அழிக்கவும் வல்லனம் கொண்டு எழுந்த ஊடகத்தின் வளர்ச்சிக்கு பலரின் ஒத்துழைப்புத் தேவையாக இருந்தது. இந்தத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய பல எழுத்தாளர்களையும் ஊடகவியலாளர்களையும் உருவாக்க விரல் விட்டு எண்ணக் கூடிய நிறுவனங்கள் உயிர்த் துடிப்புடன் செயற்பட்டன.

அத்தகைய வரிசையில் ஒன்றாய் நிமிர்ந்து நிற்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. முதலில் பல ஊடகப் பணிகளை அமைதியாக ஆற்றிக் கொண்டே வந்துள்ளது.

ஊடகவியலாளர்களின் பணி சமூகத்துக்கு அவசியமாக இருந்தது. இந்நிலையில் பல ஊடகவியல் பயிற்சிகளையும் நடத்தி பலருக்கு ஊடக அறிவை வழங்கியுள்ளது.

ஆதிகாலத்தில் வாய்மொழி மரபு பேணப்பட்டு வந்தாலும் அவை எழுத்து வழக்கிற்கு வந்த போதுதான் எதிர்காலச் சந்ததியினருக்கும் அவற்றினைக் கையளிக்க முடிந்தது. இதுபோலவே இந்நிறுவனமும் பலவற்றை புத்தக வடிவிற்குக் கொண்டு .வந்துள்ளது.

அவற்றுள் பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம், பத்திரிகை இயல் அடிப்படைகள், மின்னியக்க பத்திரிகையில் ஓர் அறிமுகம், ஊடக கலைச் சொல் அகராதி, நேர்காணல்கள் ஓர் அறிமுகம், செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம், அச்சு ஊடக அறிக்கையிடல், சித்திரிப்பு எழுத்துக்கள், ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம் போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன. இந்நூல்கள் இன்றுள்ள நிலையில் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கற்பிக்க பேராசிரியர், விரிவுரையாளர்களின் கைகளிலும் மாணவர்களுக்குக் கற்பிக்க ஆசிரியர்களின் கைகளிலும் மற்றும் ஊடக ஆர்வலர்களின் கைகளிலும் தவழ்ந்து பேருதவி புரிந்து வருகின்றது கண்கூடே.

யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பெயரினை பிரதிபலிக்கும் முகமாகவே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் என்ற பெயர் எழுந்தது.

புத்தகத்தை எழுதி அச்சிடும் வரிசையிலே புலனாய்வு அறிக்கையிடல், செய்தி செப்பனிடல், நேரலை பத்திரிகையியல் என்ற நூல்களையும் விரைவில் வெளியிடவுள்ளது.

நிஜம் எது? நிழல் எது? என்று அறிய நினைத்தால் நிழலை உலுப்பிப் பார்த்தால் நிஜத்தில் அசைவு ஏற்படாது. ஆனால், நிஜத்தை உலுப்பிப் பார்த்தால் நிழலும் ஆட்டம் காணும். இதுபோலவேதான் இந்நிறுவனமும் 11 ஆண்டுகள் கடந்தும் ஆட்டம் காணாத தன் சேவையை வழங்கி வருகின்றது. தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (TCNL net.com) என்ற இணையத்தளத்தையும், TCNL TV என்ற தொலைக்காட்சியையும் LBN கேபிள் சேவையூடாக நடத்தி வருகின்றது.

பாலுக்குப் பாலகன் அழுவதை அறிந்த துரோணர் மனம் வருந்தினார். இவ்வாறுதான் இந் நிறுவனம் உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்ல முடியாமலும் பட்டப் படிப்பை மேற்கொள்ளாது இருப்போரையும் கருத்திற்கொண்டு பிசப் சவுந்தரம் மீடியா நிலையமானது அண்மையில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைப்புப் பெற்று ஊடகவியல் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அரிய வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. இதில் மேற்கொள்ளும் கற்கை நெறிகளான: டிப்ளோமா- தொடர்பாடல் ஆங்கிலம், டிப்ளோமா-ஜேனலிஸ்சம், BSC Visual Communication என்ற மூன்று கற்கை நெறிகளை உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நடத்துகின்றது.

இவற்றோடு பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி தொடர்பாடல் ஆங்கிலம், பட்டப்பின் டிப்ளோமா ஜேனலிஸ்சம் மற்றும் MA ஜேனலிஸ்சம் ஆகிய கற்கை நெறிகளை பட்டப் படிப்பை மேற்கொண்டவர்களுக்கும் நடத்துகின்றது.



குறிப்பாக BSC Visual Communication இங்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கற்கை நெறியினை மேற்கொள்ள விரும்புவோர் அருள் திருரூபன் மரியாம்பிள்ளை, பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், இல. 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நிலையத்திற்கு சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நேரடியாக சந்திக்கலாம்.

பதிவுகளை மேற்கொள்ள வருவோர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கற்கை நெறிச் சான்றிதழ் போன்றவற்றில் 2 போட்டோப் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பாஸ்போட் அளவுள்ள 2 போட்டோக்கள் என்பன கொண்டு வரவேண்டும்.

கட்டணங்களை இரண்டு பகுதியாக செலுத்தலாம். சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை விரிவுரைகள் நடைபெறும். போதிய மாணவர்கள் கிடைப்பின் அவர்களின் வசதிகளுக்கு ஏற்ப கிளிநொச்சியில் விரிவுரைகள் நடத்தப்படும்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரின் ஸ்தாபக இயக்குநராக இன்றுவரை அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் பணியாற்றிக் கொண்டிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**ஜெயம் ஜெகன்**
புதுக்குடியிருப்பு

# தமிழர்களின் வாக்குகளை பெறவேண்டுமா? இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

## பிரபா எம்.பி. வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் வடகிழக்கு மாகாணசபை தேர்தல்களில் பிரசாரத்துக்கு அமைச்சர் பட்டாளங்களை அனுப்புவதை விட இனப்பிரச்சினைக்கான துரித தீர்வை அரசு மேற்கொண்டாலேயே தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு நிச்சயமாக வாக்களிப்பார்கள் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

கடந்த வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் நேரத்தில் தென்னிலங்கையிலுள்ள அமைச்சர்களும் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரசாரத்திற்கு சென்றிருந்தவேளை நானும் அவர்களுடன் இணைந்து அரசாங்கத்திற்காக வாக்குகளை கோரியிருந்தேன். வாக்காளர்களுக்கு பலவித சலுகைகளை அரசாங்கம் வாரி வழங்கியிருந்தாலும் அரசாங்கம் வெற்றி பெறவில்லை. சலுகைகளை பெற்றுக் கொண்ட மக்கள் பெரும்பான்மையின கட்சிகளில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கவில்லை. இதிலிருந்து வடகிழக்கு மக்கள் அபிவிருத்தியை மட்டுமன்றி அரசியல் தீர்வையும் எதிர்பார்க்கின்றார்கள் என்பது தெளிவாகிறது.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தலிலே தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதாயின் அரசியல் தீர்விற்கான நகர்வை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். சிங்களவர்கள் வாழாத தமிழர் பிரதேசங்களில் இராணுவத்தினர் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவுவதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். வட பகுதியில் இராணுவத்தின் பிரசன்னத்தை குறைக்க வேண்டும். வடகிழக்கு மாகாணங்களில் ஆளுநர்களாக இராணுவத்தை சாராதவர்களை நியமிக்க வேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வராமல் பிடிவாதம் பிடித்து வருகின்றனர். ஆறு மாத காலத்திற்குள் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமாக அரசியல் தீர்வை காண்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்குள் வருமாறு அழைப்பு விடுத்து இன்று ஆறு மாதத்திற்கும் அதிகமாகிவிட்டது. கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பங்களை கை நழுவ விடுவதே தமிழர்களின் கடந்த கால வரலாறாகும்.

யுத்த காலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்விகளை கருத்திற் கொள்ளாமல் யுத்தத்திற்கு பின்னர் கிடைத்திருக்கும் முதல் சந்தர்ப்பமான பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற பேச்சுவார்த்தை மேடைக்கு கூட்டமைப்பினர் செல்ல வேண்டும்.

அதேபோல் கூட்டமைப்பினர் தெரிவுக் குழுவுக்கு வராத பட்சத்தில் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான பரிந்துரைகளை முன்வைத்து அதை அமுல்படுத்த வேண்டும். வெறுமனே கூட்டமைப்பினர் கலந்து கொள்ளவில்லை என்றுகூறி கூட்டமைப்பினரை பகடைக்காயாக பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்க தரப்பில் முன்வைக்காதது அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் பலமிழக்க வைக்கிறது.

தமிழ்த் தேசியம் பேசுவதன் மூலமாக சர்வதேச துணையுடன் எமது மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்குமேயாயின் அது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதேநேரம் தமது எதிர்கால அரசியலுக்காகவும் வாக்குகளுக்காகவும் தமிழ்த் தேசியத்தை பேசுவார்களேயாயின் அது எமது மக்களை பின்னோக்கி கொண்டு விடுவதற்கு சமமானதாகும் என்றார். (அ-2)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

(பூந்தோட்டம்)

வுவுனியா தமிழ் மத்தி மகாவித்தியாலயத்தின் பழைய/மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் ஜூலைமாதம் 8ஆம் திகதி பாடசாலையின் ஐயாத்துரை மண்டபத்தில் தலைவர் ப. தயாபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் 'பாடசாலையின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடலிலும் ஈடுபடுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கோரியுள்ளனர். (அ-9-266)

# அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் மாங்குளம் நகர்



(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் நகரப்பகுதியில் பொது மலசலகூடம் இன்மையால் தென்பகுதி சுற்றுலா பயணிகள் உட்பட பல ஆயிரக்கணக்கான பயணிகளும் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் என பலதரப்பட்டவர்கள் அவதிப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளம் நகரத்திற்கு துணுக்காய், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பிர தேசங்களில் இருந்து தினமும் பலதரப்பட்ட ஆயிரக்கணக்கான பயணிகள் தமது தேவையின் நிமிர்த்தம் இரவு பகலாக தரித்து நின்று கடமைகளை முடித்து விட்டுச் செல்கின்றனர்.

இவர்கள் அனைவரும் தமது இயற்கை கடன்களை கழிப்பதற்கு ஒரு பொது மலசலகூடம் இன்னும் மாங்குளத்தில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் மாங்குளம் சந்தியில் கடந்த கால இறுதி யுத்தத்திற்கு முன்னர் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்த பொது மலசலகூடமொன்றும் அதற்கு அருகில் நீர் வசதிக்காக அமைக்கப்பட்ட குழாய் கிணறு ஒன்றும் தற்போது பற்றைகளால் சூழ்ந்துள்ளது. இப்பொது மலசலகூடததை உரியவர்கள் கவனத்தில் எடுத்து துப்புரவு செய்து கூடத்தை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் மாங்குளக் கிராமம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 3 வருடங்களை கடந்து விட்டநிலையிலும் மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இங்கு பொதுச்சந்தை, உள்வீதிகள், தொற்று நீக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்சார வசதி என்பன மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. எனவே, அரச உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்படி பிரதேசத்திற்கு வருகை தந்து மக்களின் குறைகளை கேட்டறிந்து தேவையான வசதிகளை ஏற்படுத்தி தரவேண்டுமென அப்பகுதி வாழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். (அ-2-9-15)

# வடமாகாண கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் கடந்த 16 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டம் அதிக இடங்களை கைப்பற்றி முன்னிலையில் உள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக்கல்வி பணிப்பாளர் கெ.சத்தியபாலன் தெரிவித்தார். இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு,

**ஆண்கள்**

**19 வயதுப்பிரிவு**

யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், மன்/பியர் அ.த.க.பாடசாலை

**17 வயதுப்பிரிவு**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யா/மகாஜனா கல்லூரி

**15 வயதுப்பிரிவு**

யா/அமெரிக்க மிஷன் கல்லூரி, யா/விக்டோரியா கல்லூரி, மன்/எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம்

**பெண்கள்**

**19 வயதுப்பிரிவு**

யா/மகாஜனா கல்லூரி, யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வவு/ கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலை

**17 வயதுப்பிரிவு**

வவு/ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வவு/கருவேப்பகுளம் அ.த.க.பாடசாலை

**15 வயதுப்பிரிவு**

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், வவு/கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலை, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம். (அ-266)

# வவு. தமிழ் ம.ம.வியில் வர்த்தகக் கண்காட்சி

(மல்லாவி)

சீரான வர்த்தக கல்வியின் ஊடாக சீரிய வாழ்க்கை தரம் என்ற தொனிப்பொருளில் வர்த்தக கண்காட்சி இடம்பெறவுள்ளது. இக் கண்காட்சியை வவுனியா மாவட்ட கல்வி சார் அமைப்புக்கள் இணைந்து தரம் 10 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்காக ஒழுங்குபடுத்தியுள்ளதாக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

இக் கண்காட்சி எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை வவுனியா தெற்கு வலயம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா முறைசாரா கல்விப்பிரிவு என்பன ஒன்றிணைந்து நெறிப்படுத்தியுள்ளன.

பல்துறைசார் வணிக வங்கிகள், தொலைத்தொடர்பு சேவைப்பிரிவுகள், சிறுகைத் தொழில் அமைப்புகள், தபால் திணைக்களம் உட்பட கணனித்தொழில்நுட்ப நிறுவனங்கள் என பலதரப்பட்ட நிறுவனங்கள் தமது சேவைகளையும் பொருட்களையும் காட்சிப்படுத்தவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி கால ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இக் கண்காட்சியை வணிகக் கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளடங்கலாக அனைத்து மாணவர்களும் கலந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கண்காட்சி இலவசமாக நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# தென்மராட்சி பிரதேச கலாசார பிரிவின் கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக கலாசார பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச மட்ட தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகளை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.செந்தூரன் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

சி.மாதுமை (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), நி.பவித்திரா (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), வி.ஹார்த்திகன் (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)

**கவிதைபாடும் போட்டி**

ர.திலக்ஷன் (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), சு.துஷாந்தன் (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), ரா.சுமன்(யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)

**கையெழுத்துப்போட்டி**

நி.சர்வினி (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), சீ. தினோஜிகா (யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), சி.வனோஜா (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

**சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரைப்போட்டி**

ம.கிருத்திகா (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), க.மயூரா (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), தி.டிசாந்தி (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி)

**கவிதைப்போட்டி**

த.டிலானி (யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), க.தனுஷியா (யா/கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி),

**கவிதை பாடும்போட்டி**

ப.உசாலினி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ப.நிதுர்ஷன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி.சொருபினி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**திறந்த பிரிவு**

**கவிதைப்போட்டி (தமிழ்)**

ச.பிரேமினி (சங்கத்தானை, சாவகச்சேரி), வ.சின்னப்பா (தனங்கிளப்பு, சாவகச்சேரி), ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

**கவிதைப்போட்டி (ஆங்கிலம்)**

வ.சின்னப்பா (தனங்கிளப்பு, சாவகச்சேரி)

**சிறுகதைப்போட்டி (தமிழ்)**

ச.பிரேமினி (சங்கத்தானை, சாவகச்சேரி), ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), ந.சஞ்சேயன் (கண்டி வீதி, சாவகச்சேரி)

**சிறுகதைப்போட்டி (ஆங்கிலம்)**

ஐ.ஷ.கேதீஸ் (டச்சுவீதி, சாவகச்சேரி)

**சிறுவர் கதையாக்க போட்டி**

க.விமலாசினி (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்), அ.கமலாசினி (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்), வை.ரவீந்திரராணி (டச்சு வீதி, சாவகச்சேரி)

**பாடலாக்கப்போட்டி (தமிழ்)**

ந.சஞ்சயன் (கண்டி வீதி, சாவகச்சேரி), ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), ச.பிரேமினி (சங்கத்தானை, சாவகச்சேரி)

**பாடலாக்கப்போட்டி (ஆங்கிலம்)**

திருமதி கே.ஜெயப்பிரதாயினி (டச்சு வீதி, சாவகச்சேரி), பெ.சண்முகநாதன் (டச்சுவீதி, சாவகச்சேரி), வ.சின்னப்பா (தனங்கிளப்பு, சாவகச்சேரி)

**நாட்டார் கலை (கற்றல்போட்டி)**

க.விமலாசினி (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்), அ.கமலாசினி (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்),

**இலக்கிய விபரணப்போட்டி**

க.விமலாசினி (வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்). (அ-3-29)

## ஆண்டிறுதிப்பரீட்சை திகதி மாற்றம்

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் க.பொ.த. உயர்தரம் 13 (2012) நாளை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்தது. ஆயினும் மேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர் வரும் 25 ஆம் திகதி நேரசூசியின் படி ஆரம்பமாகும்.

நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த பரீட்சைகள் முறையே எதிர் வரும் ஜூலை 12, 13 ஆம் தினங்களில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-9)



கிழக்கு மாகாண சபையின் பதவி காலம் முடிவடைவதற்கு முன்னர் கலைக்கப்படுவதற்கு எதிராக மேன்முறையீடுட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசார்ணை நேற்று இடம்பெற்றது. இதன் போது கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் சார்பாக சட்டத்தரணிகளான பாயிஸ் முஸ்தபா மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நீதிமன்றத்திற்கு செல்வதை படத்தில் காணலாம்.

அறிவாளி என்பவன் தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன் தான்
– டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அமைச்சருக்கும் ஆளுநருக்கும் எழுதும் அவசர மடல்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோருக்கு முதற்கண் வணக்கம்.

அவசரமாக இம்மடல் எழுதப்படுகின்றது.

தாங்கள் இருவரும் இணைந்து செயலாற்ற வேண்டிய விடயம் என்பதன் அடிப்படையில் இக் கடிதம் இருவருக்குமாக எழுத முனைந்தோம்.

தற்போது வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகிறது.

2009ஆம் ஆண்டில் பட்டம் பெற்றுக் கொண்டவர்கள் வரையில் நியமனம் வழங்கப்படும் என பரவலாக பேசப்படுகின்றது.

பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குதல் என்பது நீண்டகாலமாக இடம்பெறாத விடயமாக இருப்பதினால் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்களிற்கான அரச நியமனம் இனி எப்போது நடக்குமோ என்ற ஏக்கம் வேலையற்ற பட்டதாரிகளிடம் இருப்பது நியாயமானதே.

நாம் இங்கு பிரஸ்தாபிக்கின்ற விடயம் போர் நடந்த வன்னிப் பெருநிலப்பரப்பில் போரினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 2009 இலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் பட்டத்தை நிறைவு செய்ய வேண்டியவர்களாக இருந்த போதிலும்,

போர்ச் சூழல் மற்றும் முட்கம்பி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டிருந்தமை, குடும்ப உறவுகளின் இழப்பின் துயரம் போன்ற இன்னோரன்ன காரணங்களால், அவர்களின் பட்டப் படிப்பு இடையில் தடைப்பட்டுப் போனது.

முட்கம்பி முகாம்களில் இருந்து விடுதலை கிடைத்த பின்னர் அவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு திரும்பினார்களாயினும், அவர்களின் மனநிலை, பட்டப்படிப்பை தொடர்வதற்கும் பரீட்சைக்கு தயாராகுவதற்கும் பெருந் தடையாக இருந்தன.

இது தவிர, இத்தகைய மாணவர்களில் சிலர் மன உடைவின் காரணமாக பல்கலைக்கழக படிப்பு வேண்டாம் என்று வெறுப்படைந்தமையும், இன்னும் சிலர் தங்களை மாய்த்துக் கொண்ட துயரத்தையும் நீங்கள் அறியாமல் இருக்க முடியாது.

எனவே வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் போது போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த அத்தனை வேலையற்ற பட்டதாரிகளிற்கும் அரச நியமனம் வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

போருக்குள் அகப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவர்கள் பட்டத்தையும் முடித்து வேலையும் இல்லாமல் இருப்பது என்பது சாதாரண விடயம் அல்ல என்பதை தாங்கள் இருவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எனவே வன்னியில் இருக்கக் கூடிய பட்டச் சான்றிதழ் வைத்துள்ள அத்தனை வேலையற்ற பட்டதாரிகளிற்கும் தற்போது வழங்கப்படவுள்ள அரச நியமனம் கிடைப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இஃது ஒரு விசேட ஏற்பாடாக இருப்பதால் இது விடயத்தில் எவரும் மனஸ்தாபம் அடைய மாட்டார்கள் என்பது உறுதி.

# கிழ. மாகாணசபையைக் கலைக்க எதிர்ப்பு
## முடிவை மீள்பரிசீலனை செய்கிறது அரசு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையைக் கலைத்து விரைவில் தேர்தல் நடத்தப்படுவதற்கான அறிகுறிகள் மிகவும் தென்பட்டு வருவ தாக கூறப்பட்டு வந்த நிலையில், மாகாண சபையைக் கலைப்பது தொடர்பிலான தனது முடிவை அரசாங்கம் தீவிரமாக மீள்பரிசீலித்து வருவதாக தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணசபையின் ஆயுள் காலம் முடிபடைவதற்கு முன்னர், அதைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருந்தது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் உயர்பீடம் கிழக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு அரசியல் பிரமுகர்களுடன் முக்கிய பேச்சுக்களையும் நடத்தியிருந்தது.

இதன் பிரகாரம் கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு அரச வட்டாரங்களில் அநேகமானோர் இணக்கம் தெரிவித்ததையடுத்து தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருந்தது.

இந்நிலையில், பலதரப்புக்களிலிருந்தும் எழுந்துள்ள கடும் எதிர்ப்புக்க ளையடுத்து தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இம்மாத இறுதியில் கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு அரசாங்கம் உள்ளூரத் தீர்மானித்திருந்தாலும் தற்போதைக்கு அதனைக் கலைப்பதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது என உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைக்கின்றது.

அதேவேளை, கிழக்குமாகாணசபையை அதன் பதவிக்காலம் முடிபடை வதற்கு முன்னர் கலைக்கக் கூடாது என கிழக்கு மாகாணசபையில் தீர்மானம் ஒன்று ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருந்தது.

அத்துடன், கிழக்கு மாகாணசபை முன் கூட்டியே கலைக்கப்படுவதற்கு எதிராக வாக்காளர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந–8,11)

## யுனெஸ்கோ அமைப்பு அரசியல் மயமாகிறது
### அரசாங்கம் குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்களில் ஒன்றான யுனெஸ்கோ அமைப்பு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

யுனெஸ்கோ அமைப்பு கிரமமாக அரசியல் மயப்படுத்தப்பட்டு வருவதாக பாரிஸிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு முக்கிய நிகழ்வுகளின் போது யுனெஸ்கோ ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுத்துள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார். அரேபிய கிளர்ச்சியின் போது யுனெஸ்கோவின் பக்கச்சார்பான நிலைப்பாடு அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வமைப்பு அரசியல் மயப்படுத்தப்படுவதனை தடுத்து நிறுத்த உலக நாடுகள் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந–2)

## கிளி.யில் சோள உற்பத்தி தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

கமநல அபிவிருத்திகள் வன ஜீவராசிகள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வடமாகாணத்தில் அதிகளவு சோள உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடலை நேற்றுமுன்தினம் அவர் மேற்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் ஏற்றுமதிகளை நோக்காகக் கொண்டு சோள உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான வசதி வாய்ப்புக்களை தாம் ஏற்படுத்தித் தருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தலுவத்த, மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், கமநல சேவை நிலைய அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ–2)

## வீதி மூடுதல் பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு வேலைகளுக்காகவும் கடைக் கட்டங்களை பின் நகர்த்தும் நோக்கத்திற்காகவும் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை யாழ்– காங்கேசன்துறை வீதியின் மின்சார நிலைய வீதி சந்தியிலிருந்து சிவன் கோவில் சந்தி வரை வீதி மூடப்பட்டிருக்கும்.

இக் காலப்பகுதியில் சகல மக்களும், வாகனங்களும் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி மற்றும் மணிக்கூட்டு வீதியைப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் கேட்டுள்ளார். (ந)

## நண்பனை வாளால் வெட்டியவருக்கு நீதிமன்றத்தால் விளக்கமறியல் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

தனது நண்பனை வாளினால்வெட்டி காயப்படுத்தியவருக்கு யாழ். நீதிமன்றம் விளக்கமறியல்விதித்துள்ளது.

யாழ்.திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் அதே இடத்தினைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் மற்றையவரை வாளால் வெட்டியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த பி.ரஜீவன் (வயது–2)என்பவர்யாழ்.போதனாவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த குறித்த இளைஞரின் முறைப்பாட்டினை பதிவு செய்த கோப்பாய் பொலிஸார் குறித்த இளைஞரினை வெட்டிக் காயப்படுத்திய அதே இடத்தினைச் சேர்ந்த பொ.நல்லைநாதன் என்பவரை கைது செய்து நேற்று யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா குறித்த நபரினை நாளைவரை விளக்கமறியிலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந–4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர் வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதி வரை 25 தினங்கள் நடைபெறவுள் ளது.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ந பனா அபிஷேகம் நடைபெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும் என ஆலய பரிபாலகர் அறிவித்துள்ளார். (அ–9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வீர இளைஞருக்கு



என்மகனே, உறுதியாகப் பற்றி நில். உனக்கு உதவுவதற்காக யாரையும் இலட்சியம் செய்யவேண்டாம்.

மனித உதவிகள் அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற மடங்கு பெரியவர் அல்லவா? புனிதனாக இரு.

இறைவனிடம் நம்பிக்கை வைத்திரு. அவரையே எப்போதும் சார்ந்திரு– நீ சரியான பாதையில் போகிறாய். உன்னை எதுவும் எதிர்த்து நிற்கமுடியாது.

நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்ச மாட்டீர்கள், எதற்காகவும் நிற்கமாட்டீர்கள். சிங்கங்களெனத் திகழ்வீர்கள். நாம் உலகம் முழுதையும் விழித்தெழச் செய்தாக வேண்டும்.

கோழைத்தனம் உதவாது. முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்வதில்லை. புரிகிறதா? உயிரே போவதானாலும் உண்மையைப் பற்றி நில்லுங்கள்.

ஒளிமிக்கவனே எழுந்திரு. எப்போதும் தூயவனே எழுந்திரு. பிறப்பு இறப்பு அற்றவனே எழுந்திரு. எல்லாம்வல்லவனே எழுந்து உனது உண்மை இயல்பை வெளிப்படுத்து. இந்த அற்ப நிலைகள் உனக்குத் தகுந்தவை அல்ல என்று சொல்லுங்கள்.

# கம்பீரே சிறந்தவர்; கும்ளே தெரிவிப்பு



சமீபகாலமாக டெஸ்ட்போட்டிகளில் இந்திய கிரிக்கெட் அணி சொதப்பி வருகிறது. கடைசியாக விளையாடிய 8 டெஸ்டில் தோல்வியைச் சந்தித்துள்ளது. இதனால் டெஸ்ட் அணிக்கு கப்டனாக உள்ள டோனியை மாற்ற வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கூறிவருகின்றனர்.

இந்நிலையில் கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கும்ளே அளித்த பேட்டியில்,

இந்திய அணி டெஸ்ட் போட்டியில் தொடர் தோல்விகளைச்சந்தித்து வருவது வருத்தமளிக்கிறது. விளையாட்டில் தோல்வி என்பது சகஜம் தான். ஆனால் நம்பர் 1 அணியாக இருந்த இந்தியா தொடர்ச்சியாக 8 டெஸ்டில் தோல்வியடைந்தது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. டோனி ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிகளில் சிறப்பாக அணியை வழி நடத்திச் செல்கிறார்.

தற்போது டெஸ்ட் அணிக்காக புதிய கப்டனை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இந்திய கிரிக்கெட் வாரியம் உள்ளது. டோனிக்கு பதிலாக கம்பீரை கப்டனாகத் தேர்வு செய்யலாம். கப்டன் பதவிக்கு முழுத் தகுதியானவர் என்பதை ஐ.பி.எல். போட்டிமூலம் கம்பீர் நிரூபித்துள்ளார். கொல்கத்தா அணிக்கு ஐ.பி.எல் கோப்பையை பெற்றுத்தந்தார். அவருக்கும் ஒருவாய்ப்பு அளிக்கலாம்.




# கூடைப்பந்தாட்ட அணியினரை கௌரவிக்கும் நிகழ்வு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் அகில இலங்கை மாகாணங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப்போட்டியில் தேசிய மட்டத்தில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பெண்கள் கூடைப்பந்தாட்ட அணியையும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் வி.வினோதினி தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட வீர, வீராங்கனைகள் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள வை. எம். சி.ஏ. கட்டடச் சந்தியில் இருந்து மேளவாத்தியம் சகிதம் கண்டி வீதி வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் உதவிப் பணிப்பாளர் எஸ். ஈஸ்வரராஜா மற்றும் வீடமைப்புத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலக முகாமையாளர் ஜெயரட்னம் நெபெல் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டினார்கள்.

# விளையாட்டு விழா

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை அன்பு மலர் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு உத்திராவத்தை ஞானவைரவர் ஆலயச்சூழலில் நடைபெற வுள்ளது.

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை மத்திய சனசமூக நிலைய உப தலைவர் இ. நிரோஜன் இந்நிகழ்வில் தலைமை தாங்கவுள்ளார்.

# மிகச்சிறந்த அணித்தலைவர் டோனி; காற்பந்து ஸ்டார் டிராக்போ





இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி மிகச்சிறந்த அணித்தலைவர் என்று ஐவரிகோஸ்ட் காற்பந்து அணியின் அணித்தலைவர் திடையர் டிரோக்போ பாராட்டியுள்ளார்.

பெப்சி ரி20 காற்பந்துப்போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் புதுடில்லி தியாகராஜ் மைதானத்தில் நடைபெற்றது. இதையொட்டி நடைபெற்றகண்காட்சிப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மஹேந்திரசிங் டோனி தலைமையிலான அணியுடன் டிராக்போ அணி விளையாடியது.

புதுடில்லியின் ஊடக சந்திப்பில் பேட்டியளித்த டிராக்போ கூறுகையில், இந்திய காற்பந்து பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. ஆனால் இங்குவந்த பின்புதான் காற்பந்துக்கு எவ்வளவு பெரிய மரியாதை இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன்.

இந்திய கிரிக்கெட் அணி பற்றி ஓரளவு தெரியும். கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி சிறப்பாக விளையாடி கிண்ணத்தை வெல்ல அணித்தலைவர் என்ற முறையில் டோனி மிகச்சிறப்பாக செயற்பட்டார் என்று புகழாரம் சூட்டினார்.

பிறீமியர் லீக் காற்பந்துப்போட்டியில் செல்சி அணிக்காக நீண்டகாலமாக விளையாடி வரும் டிராக்போ சமீபத்தில் அந்த அணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதுவரை வேறு எந்த அணியிலும் அவர் இணையவில்லை.ஷாங்காய் ஷெக்குவாவில் இணையவுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த சம்பியன்ஸ் லீக்போட்டி இறுதி ஆட்டத்தில் பெயர்ன்மியூனிச்சை வீழ்த்தி செல்சி முதன்முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது. செல்சி கிண்ணம் வெல்ல திடையர் டிராக்போ அடித்த கோல்கள் தான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா பிரிமியர் லீக் அணிகள் விற்பனைக்கு; அடிப்படை விலையாக 3 மில். டொலர் நிர்ணயம்




மிகவிரைவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள சிறிலங்கா பிறிமியர் லீக் போட்டிகளுக்கான அணிகளைவிற்பனைசெய்யத்தீர்மானித்துள்ள இலங்கைக் கிரிக்கெட்சபை அணிகளுக்கான விலைகளையும் அறிவித்துள்ளது. இதன்படி அணி ஒன்றை வாங்குவதற்கான அடிப்படை விலையாக 3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

7 அணிகளையும் இலங்கைக் கிரிக்கெட் சபை 7 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்க வுள்ளதாகவும், அதனை அடிப்படையாக வைத்து எஸ்.எல்.பி.எல். இன் திட்டங்கள் திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதற்கான ஏலங்கள் வரவேற்கப்படுவதாகவும் இலங்கைக் கிரிக் கெட் சபை அறிவித்துள்ளது.

ஏலத்தொகையினைஅறிவிப்பதற்கானஇறுதித் தினமாகஜூன்25ஆம்திகதிஅறிவிக்கப்பட்டுள்ள துடன், ஏலத்தில்வெற்றிபெற்றவர்களது விபரங்கள் அந்தன்றே அறிவிக்கப்படும் எனவும் இலங் கைக் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

விருப்பமுள்ளவர்கள்3அணிகளுக்குஅதிகபட்ச மாக ஏலத்தொகையை அறிவிக்கலாம் எனவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

முதலாவது எஸ்.எல்.பி.எல். போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கொழும்பிலும், பல்லேகலவிலும் இடம்பெறத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாகாணங் களை அடிப்படையாகக் கொண்ட 7 அணிகள் பங்குபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஐ.பி.எல். போட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறவுள்ள இந்த எஸ்.எல்.பி.எல். போட்டிகளில் அணி களுக்கான அடிப்படை ஏலத்தொகை ஐ.பி.எல். தொகையை விட மிகக்குறைவானதாகவும்,

2008ஆம் ஆண்டில் ஐ.பி.எல். முதற் தடவையாக இடம்பெற்ற போது அணிகளுக் கான அடிப்படை விலையாக 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் நிர்ணயிக்கப் பட்டதோடு 2010ஆம் ஆண்டில் மேலதிகமாக இரண்டு அணிகள் சேர்க்கப்பட்ட போது அடிப் படை விலையாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கால் இறுதியில் ஜேர்மனி, போர்த்துக்கல்

**ஐரோப்பிய கால்பந்து**



14ஆவது ஐரோப்பிய கோப்பை கால்பந்து [illegible]டி போலாந்து, உக்ரைனில் நடைபெற்று வருகிறது.

பி பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் நெதர்லாந்து–போர்த்துக்கல் அணி கள் மோதின. கிறிஸ்டியானோ றொனால்டோ வின் அபாரமான ஆட்டத்தில் போர்த்துக்கல் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

நெதர்லாந்து தான் மோதிய 3 ஆட்டத்திலும் தோற்று போட்டியிலிருந்து வெளியேறியது. அந்த அணி ஏற்கனவே 0:1 என்ற கோல் கணக்கில் டென்மார்கிடமும் 1:2 என்ற கணக் கில் ஜேர்மனியிடமும் தோற்றது இதேபிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் 3 முறை சம்பி யனான ஜேர்மனி 2:1 ஏன்ற கோல் கணக்கில் டென்மார்க்கை தோற்கடித்தது.

ஜேர்மனி அணியில் லுகாஸ் பொடோல்ஸ் கியும் (19ஆவது நிமிடம்) பெண்டரும் (80 ஆவது நிமிடமும்), டென்மார்க் தரப்பில் குரோன் டெல்லியும் (24ஆவது நிமிடம்) கோல் அடித்தனர். ஜேர்மனி அணி தொடர்ந்து 3 ஆவது வெற்றியை பெற்று ஹற்றிக் சாதனை புரிந்தது.

அந்த அணி தொடக்க ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் போர்த்துக்கலையும் 2:1 என்ற கோல்க்கணக்கில் நெதர்லாந்தையும் தோற் கடித்து பி பிரிவில் ஜேர்மனி 3 வெற்றியுடன் 9 புள்ளிகள்பெற்று முதல் இடத்தையும் போர்த்துக்கல் 2 வெற்றி ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தை யும் பிடித்தன.

முதல் இரண்டு இடங்களைப் பிடித்த ஜேர்மனி, போர்த்துக்கல் அணிகள் காலிறு திக்கு தகுதி பெற்றன. டென்மார்க் (ஒரு வெற்றி யுடன், 3 புள்ளி) 3 ஆவது இடத்தையும் நெதர் லாந்து வெற்றி எதுவும் பெறாமல் கடைசி இடத் தையும் பிடித்து போட்டியிலிருந்து வெளியேற் றப்பட்டன.

கடந்த உலகக் கோப்பையில் இரண்டா வது இடத்தைப் பிடித்த நெதர்லாந்து–ஐரோப் பிய கோப்பை போட்டியில் முதல் சுற்றிலேயே வெளியேறியது மிகவும் பரிதாபமே.

ஜேர்மனி அணி காலிறுதியில் கிரீசையும் (22ஆம் திகதி போர்த்துக்கல் அணி காலிறு தியில் செக்குடியரசையும் (21ஆம் திகதி) சந் திக்கிறது.

# குரோசியாவை வீழ்த்தி காலிறுதிக்குள் ஸ்பெயின்

ஸ்பெயினிடம் தோற்று தொடரிலிருந்து வெளியேறியது குரோசிய அணி 14ஆவது [illegible]ா கோப்பை கால்பந்து தொடரில் நேற்று நடைபெற்ற சி பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு உலக சம்பியனும், நடப்பு யூரோ சம்பியனு மான ஸ்பெயின் அணி குரோசியா அணியை சந்தித்தது.

2ஆவது பாதியிலும் வீரர்கள் ஆக்ரோஷ மான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நடப்பு சம்பியனான ஸ்பெயின் அணிக்கு ஈடுகொடுத்து குரோஷிய அணியும் விளையாடியதால் ஆட் டம் மிகவும் பரபரப்பாக சென்றது. நிமிடங்கள் கரைந்து கொண்டே சென்றதால் இரு அணி யின் ரசிகர்களும், வீரர்களும் பரபரப்பின் உச்சத்தை அடைந்தனர்.



இப் போட்டியில் வென்றால் மட்டுமே காலி றுதிக்கு தகுதிபெற முடியும் என்பதால் இரு அணியினரும் வெற்றிபெறும் முனைப்புடன் களமிறங்கின.

ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணி யினரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தினர். இரு அணியினரும் ஒருவருக்கொரு வர் சளைக்காமல் ஆடியதுடன், கோல் அடிக் கும் முயற்சியிலும் மும்முரமாக ஈடுபட்டனர். எனினும் முதல் பாதியின் முடிபில் இரு அணி வீரர்களாலும் கோல் அடிக்க முடியவில்லை.

இந்நிலையில்போட்டி முடிய இரண்டுநிமிடங் களே இருந்த நிலையில், அதாவது ஆட்டத் தின் 88ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் நவாஸ் எளிதான கோலை கம்பீரமாக அடித்தார். அடுத்த இரண்டு நிமிடங்களில் குரோஷிய வீரர் களால் பதில் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால் விறுவிறுப்பான ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் குரோசியாவை வீழ்த்தி ஸ்பெயின் அணி வெற்றிபெற்றது டன் காலிறுதியிலும் நுழைந்தது.

யூரோ கால்பந்தில் காலிறுதிக்கு செக்குடியரசு, போர்த்துக்கல், ஜேர்மனி, கிரீஸ், ஸ்பெயின் மற்றும் இத்தாலி ஆகிய 6 அணிகள் நேற்றுவரை தகுதி பெற்றுள்ளன. மற்றைய 2 அணிகளும் எவை என்பது இன்று தெரிந்துவிடும்.

# அயர்லாந்தை வீழ்த்தி காலிறுதிக்குள் இத்தாலி

14ஆவது யூரோ கோப்பை கால்பந்து தொடரில் சி பிரிவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் இத்தாலி அணியும் அயர் லாந்து அணியும் மோதின.

இப் போட்டியில் வென்றால் மட்டுமே காலி றுதிவாய்ப்பை பெறமுடியும் என்ற கட்டாயத் துடன் இத்தாலி அணி களமிறங்கியது. மறு புறம் அயர்லாந்து அணி ஏற்கனவே தொடரி லிருந்து வெளியேறிவிட்டதால் ஆறுதல் வெற்றி பெறும் முனைப்பில் களமிறங்கி யது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடை பெற்ற இந்த ஆட்டத்தின் 35ஆவது நிமிடத் தில் இத்தாலி வீரர் கசானோ முதல் கோல் அடித்து, தமது அணிக்கு முன்னிலை பெற் றுத்தந்தார்.

முதல் பாதி முடியும் வரை அயர்லாந்து வீரர்களால் பதில்கோல் திருப்ப இயலவில்லை இதனால் முதல் பாதியின் முடிபில் 1:0 என்ற கோல் கணக்கில் இத்தாலி அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலாவது பதில்கோல் அடிக்க வேண்டும் என்ற அயர்லாந்து வீரர் களின் முயற்சிக்கு இத்தாலி அணியினர் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டனர்.

இத்தாலி அணியினர் ஏற்கனவே முன் னிலை பெற்றுவிட்டதால், தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தினர். 89 ஆவது நிமிடம் வரை அடுத்தகோல் அடிக்கப்படாததால் இத் தாலி அணியின் வெற்றி உறுதி செய்யப்பட் டது.

எனினும் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் அணியின் மரியோ பாலோடெலி இரண் டாவது கோல் அடித்து அணியின் வெற்றியை கொண்டாடினார்.

இறுதியில் 2:0 என்ற கோல்கணக்கில் அயர்லாந்தை தோற்கடித்து இத்தாலி அணி காலிறுதிக்கு முன்னேறியது.



# ஜெனிவா தீர்மானம்...

நலன்புரி முகாம்களில் தங்கி இருப்பதாகவும், ஏனையோர் மீளக் குடியேற்றப்பட்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்ட மனிசா குணசேகர, இத்தகையதொரு நிலையில் 19வது அமர்வில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தேவையற்ற ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையில் மனிதவுரிமைகளை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் போருக்கு பின்னரான நல்லிணக்கம் உள்ளிட்ட ஏனைய விவகாரங்கள் தொடர்பில் ஐ.நாவின் 20 வது அமர்வில் இலங்கை தரப்பு அறிக்கை ஒன்றை கையளித்துள்ளது.

அத்துடன் வட மாகாணத்தில் படைத்தரப்பினரைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் இலங்கை தரப்பால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, இவ்வறிக்கைகள் இலங்கையின் மொத்த நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு உதவியாக இருக்கும் எனக் கூறியுள்ளார்.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சிலவற்றை நடைமுறைப் படுத்த உள்ளதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளதாகவும் கருணாதிலக அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20வது அமர்வுக்கு இலங்கை தரப்பில் ஜெனிவாவுக்கான பிரதித் தூதுவர் மனிசா குணசேகர தலைமை தாங்குகின்றார். இந்த அமர்வில் இலங்கையின் அமைச்சர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

# கண்ணாடிகள்...

இரும்புக் கம்பிகளினாலும் கூரிய ஆயுதங்களினாலும் பேருந்தின் கண்ணாடிகளை அடித்துடைத்து தமது எதிர்ப்பை காட்டியதோடு, உரிமைக்காக போராடிய மக்களின் மீது கழிவு ஓயிலையும் ஊற்றி அவமானப் படுத்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை நேரில் சென்று பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா பொதுமக்கள் தமது உரிமைக்காக போராடினால் இதுதான் நிலை என்பதை இந்தத்தாக்குதல் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது எனவும் இதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார். (ந-8,6)

# மகிந்தவின்...

வெற்றிபெற வேண்டும் என்ற நோக்குடன் மக்கள் அதனைப் பொறுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று யுத்தம் முடிபுற்று மூன்று வருடங்கள் கடந்தும் மக்கள் மீது அரசு சுமத்திய சுமையை அது இறக்கிவைக்க முன்வரவில்லை மக்களின் பணத்தை கொள்ளையடிக்கின்றது.

அதேபோல் அப்பாவி மக்களின் சேமலாப நிதியிலும் அரசு கைவைத்துள்ளது. அரசு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து தமக்கேற்ற முறையில் நாசம் செய்கிறது. ஊழியர் சேமலாப நிதி உட்பட பொதுமக்களின் பணத்தில் 10 கோடி தொடக்கம் 100 கோடி வரையான பணத்தை அரசு கொள்ளையடித்துள்ளது.

வருகின்ற மாதங்கள் எமக்கு மிகவும் முக்கியமான காலப்பகுதியாகும். இந்தக் காலப்பகுதியில் எமது பொது எதிரணியின் அரச எதிர்ப்பை உச்சரீதியில் வெளிப்படுத்துவோம். இதற்காக அனைத்து தொகுதிகளிலிருந்தும் மக்கள் ஆதரவைத் திரட்ட தொகுதி அமைப்பாளர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார். (ந-8;11)

# வாழ்வுரிமைப் போராட்டத்தை...

யாழ்ப்பாண மாவட்ட வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் நேற்றைய தினம் காலை 9 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் இந்த வாழ்வுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆலயத்திலிருந்து பிரதான வீதியூடாக தெல்லிப்பழை பிரதேச செயலகம் நோக்கி பேரணியாக செல்ல முற்பட்ட பொதுமக்களை வழிமறித்த பொலிஸார் இது கலகப் போராட்டம் எனவே நீங்கள் இந்த இடத்தை விட்டு நகர்ந்தால் கைது செய்யப்படுவீர்கள் எனவும் எச்சரித்துள்ளனர்.

கலகம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்ததோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் அடக்கப்பட்டனர்.

பொலிஸாரின் இத்தகைய அடக்குமுறைகளை தட்டிக்கேட்க முற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் எச்சரிக்கைப் பட்டதோடு தொடர்ந்து அவமதிக்கப்பட்டனர்.

இதனால் கோபமடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பேரணியாக செல்ல முற்பட்ட மக்களை வீதியில் வாகனங்களை குறுக்கே விட்டு மறித்த பொலிஸார் 5 பேரை மட்டும் பிரதேச செயலகத்திற்கு மகஜர் கொடுக்க அனுமதித்தனர்.

ஏனையவர்கள் கலகம் அடக்கும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் முடக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 10 காவல் துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை தாங்கிய நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் இந்த வாழ்வுரிமை போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த பொதுமக்கள் தமது கைகளில், எமது நிலத்தில் எம்மை வாழ விடு, அரசே எம் வீட்டில் நாம் வாழவேண்டும்; எம் நிலத்தில் நாம் ஆள வேண்டும், அரசே வலி. வடக்கு மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்காதே; எமது வீடு எமக்கு வேண்டும் ; எமது நிலத்தை ஆக்கிரமிக்காதே; எமது நிலத்தை பறிக்காதே, எமது உரிமையை பறிக்காதே, நில அபகரிப்பு வேண்டாம் எமது நிலத்தில் வாழ விடு என எழுதப் பெற்றிருந்த எதிர்ப்புப் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இதேவேளை பொலிஸார் நடந்து கொண்ட விதமானது ஜனநாயகமற்ற நாட்டில் வாழ்கிறோம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என அக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (ந-6)

# ஜெனிவாத் தீர்மான...

இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் கலந்து கொண்டிருந்த போதிலும் இதன் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் செய்திகள் இதுவரை வெளிவரவில்லை.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியப் பிரதமரின் நிகழ்ச்சி நிரல் இறுக்கமானதாக இருக்கும் என்பதால் இச் சந்திப்பு குறுகிய நேர சந்திப்பாகவே இடம்பெற்றிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் கடந்த இரண்டு வருடங்களாக இருந்து வரும் பிரச்சினைகளுக்கு முடிபு காணும் வாய்ப்பை இச் சந்திப்பு ஏற்படுத்தும் என தஹிந்து ஊடகம் எதிர்வு கூறியிருந்தது.

2010 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

2011ஆம் ஆண்டில் மாலைதீவில் இடம் பெற்ற சார்க் மாநாட்டின்போதும், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் போது இந்தியப் பிரதமரை மகிந்த சந்தித்திருந்த போதிலும் அது குறுகிய நேர சந்திப்புக்களாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

# பால்மாவின்...

வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவம் என்பதற்காக...

தமிழர்களுக்கு சொந்தமான காணிகள் இர்ராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு.

மேலும் சில பகுதிகளிலுள்ள தனியார் காணிகளையும் அரச காணிகளையும் இராணுவத்தினர் கேட்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் கேட்கின்றனர் என்பதற்காக எல்லாக் காணிகளையும் கொடுத்துவிட முடியாது.

அத்தோடு தன்னிச்சையாக காணிகளைஇராணுவத்தினர் அபகரிக்கவும் முடியாது.

இராணுவத்தினர் தமக்கு காணிகள் வேண்டும் என்றால் அதை விண்ணப்பித்து முறைப்படியே பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பித்துக் கேட்டாலும் காணிகளைக் கொடுப்பதா இல்லையா என்று மக்கள் நலன்களின் அடிப்படையில் வைத்து ஆராய்ந்தே முடிபு எடுக்கப்படும்.

தமக்கு இஷ்டப்பட்டபடி இராணுவத்தினர் காணிகளை அபகரிக்க நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

மேலும் தனியார் காணிகள் இராணுவத்திற்கு வழங்கப்படாது என்று வடக்கு மாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

எனவே மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் காணி அபகரிப்புத் தொடர்பிலும் கூடிய கவனம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)


## பணி நிலை வேண்டுகோள்

கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

(i) நிர்வாக உத்தியோகத்தர்
(அரச, தனியார் துறைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது)

(ii) தாதிய உத்தியோகத்தர்
(முன்னனுபவம் தொடர்பான சான்றை விண்ணப்பத்துடன் இணைக்கவும்)

(iii) பண்ணை பராமரிப்பாளர்
(முன்னனுபவம் தொடர்பான சான்றை விண்ணப்பத்துடன் இணைக்கவும்)

(iv) தொழிலாளர்கள் - (02)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தங்கள் சுயவிபரக் கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்கு 27.06.2012 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**சிவபூமி பாடசாலை**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**
(8671)

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனை

புதிய நியந்தனைகளிற்கு அமைவாக
மீண்டும் இன்று முதல் எம்மிடம் சட்டரீதியான உள்ளதை, உள்ளபடியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டட் (Pv82703)**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016



22A, Frank fort place
Bambalapitty
011 250 8443

504, Hampton Street,
Melborne, Australia.
Land Line:- 0061 3904 37100
(C-294)

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ் International Courier & Cargo Service

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1Kg க்கு | லண்டன் 655 /= | ஜேர்மனி 785 /= | பிரான்ஸ் 795 /=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
மேலதிக கட்டணம் எதுவும் இன்றி யாழ்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும். (Door to Door Service)
அவசர கடிதங்கள் உலகின் எப்பாகத்திற்கும் 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service)
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

இல. 01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். தொ. இல : 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.